விலை சதம் 60

பக்கங்கள் 10

பாவியுங்கள்!
அண்ணு பற்பொடி
பைக்கட் -/20சதம்
பாவித்த மக்கள்
மீண்டும்
விரும்பிப் 'பாவிப்பது
அண்ணு பற்பொடி

# ஈழநாடு
## வார மலர்
**THE EELANADU VARAMALAR**

மில்க்வைற் சலவைப் பவுடர்
துரித சலவைக்கு சிறந்த
மில்க்வைற்
சலவைப் பவுடரை
வாங்கி உபயோகியுங்கள்,
உங்கள் ஆடைகளை
அதிவெண்மையாகவும்,
பிரகாசமாகவும் சலவை
செய்கின்றது
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

SRI LANKA
RECEIVED
1980-2-5
PERIODICALS
DIVISION
LIBRARY

மலர் 21 | தை 20 | ரபி அவ் 15 | ஞாயிற்றுக்கிழமை (3-2-80) | இதழ் 356

# யாழ் மாவட்டத்திற்கு 149 ஆசிரியர்கள் இடமாற்றம்

## வெளிமாவட்டங்களுக்கு 16 பேரே செல்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

வெளி மாவட்டங்களிலிருந்து இம்மாதம் முதல் 149 ஆசிரியர்கள் யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர்.

இதேவேளையில் 16 ஆசிரியர்கள் யாழ். மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர்,

இந்த இடமாற்றங்கள் 1-2-80 முதல் அமுலுக்குவருகிறது.

இடமாற்ற உத்தரவு கிடைக்கப்பெற்றவர்கள் தமக்குரிய பாடசாலைகளைப் பெறுவதற்கு இலங்கைத் தமிழாசிரியர் சங்க யாழ். மாவட்டக் கிளைச் செயலாளர் திரு. எஸ். சிவபாலசிங்

(10-ம் பக்கம் பார்க்க)

### விலகினுர்

சென்னை, பெப். 2

தமிழக சட்டசபை உறுப்பினர் திரு. எஸ். ஆறுமுகம் அ. இ. அ. தி. மு. க.விலிருந்து ராஜினுமாச் செய்துள்ளார்.

இதேவேளையில் காந்தி-காமராஜர் காங்கிரஸ் மாநில பொருளாளருமான திரு. ஜோன் வின்சன்ட் தமது கட்சியிலிருந்து வெளியேறி தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் முன்னிலையில் அ. இ. அ. தி. மு. க.வில் சேர்ந்துள்ளார். (இ)

சுதந்திர தினம்

## இளைஞர் பேரவை விடுத்துள்ள கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை சுதந்திர தினமான இம்மாதம் 4-ம் திகதியைத்துக்க தினமாக அனுட்டிக்குமாறும், சுதந்திரதின விழா நிகழ்ச்சிகள், அணி வகுப்புக்கள் எதிலுமே தமிழ் மக்கள் கலந்துகொள்ளக் கூடாது என்றும் தமிழ் இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அநீதியை, அதர்மத்தை, அடிமைத்தனத்தை முதலில் எதிர்க்கவேண்டும். அடுத்துப் போராடவேண்டும். இன்று தமிழ் மக்கள் போராட்ட சக்தியை உருவாக்க, வளர்த்துக்கொள்ள தம்மைத் தயார் படுத்திக்கொள்வதே முதற்கடமையாக இருக்கிறது. அடிமைத்தனமும் முதலாளித்துவத்தன்மையும், சக்தி சமூக ஒடுக்குமுறைகளும், சுரண்டல் தனமும் நிறைந்த சமுதாய அமைப்பிலிருந்தும், பொருளா

(10-ம் பக்கம் பார்க்க)

மாவட்ட அபிவிருத்திச் சபை

## ஜனுதிபதி ஆணைக்குழு அறிக்கை பெப். 10ல் வெளிவரும்?

(கொழும்பு)

மாவட்ட அபிவிருத்திச்சபைகளை அமைத்துநிர்வாகத்தைப் பன்முகப்படுத்துவது தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனுதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையை இம்மாதம் 10-ம் திகதி ஜனுதிபதியிடம் கையளிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. விக்டர் தென்னக்கோன் தலைமையிலான இக்கமிஷனுக்கு கடந்த மாதம் 31-ம் திகதி வரை ஏற்கனவே வழங்கப் பட்டிருந்த அவகாசம் முடிவடைந்ததை அடுத்து இம் மாதம் 11-ம் திகதிவரை அவகாசம் வழங்கப்பட்டது.

இந்தஆணைக்குழுவின்அங்கத்தவர்களில் ஒருவரான பேராசிரியர் ஏ. ஜே. வில்சன் தற்போது கனடாவில் தங்கியிருப்பதால் இந்த ஆணைக்குழுவின் அறிக்கை அவரது பார்வைக்காக கனடாவுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும், இவ் விவகாரம்பற்றிய தமது கருத்துக்களை டாக்டர் வில்சன் கனடாவிருந்து ஜனுதிபதி திரு. ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு அறிவிப்பார் என்றும் தெரியவருகிறது. (ம-இ)

## சஞ்சய் கோரிக்கை

புதுடில்லி, பெப். 2

உத்தரப்பிரதேச மாநில அரசு ராஜினுமாச் செய்ய வேண்டும் என்று இந்திய லோகசபை உறுப்பினரும் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் மூத்த புதல்வருமான திரு. சஞ்சய் காந்தி கூறியுள்ளார்.

மாநிலத்தில் ஆட்சியிலிருக்கும்ஜனதா ஆரசினுல் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட முடியாமலிருப்பதாகவும் மக்கள் அச்சத்துடன் வாழ்கிருர்கள் என்றும் அவர் கூறினுர். (கு)

## அ. இ. தமிழ்க் காங்கிரஸ் செயலாளர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

'தமிழினத்தின் சம்மதத்தைப் பெருத இன்றைய அரசியலமைப்பின் மூலம் நாம் சுதந்திரம் இழந்தவர்களாகி விட்டோம். 1956-ல் சிங்களம் மட்டும் சட்டம்உருவாக்கப்பட்டதிலிருந்து படிப்படியாக தமிழினம் சமத்துவத்தை இழந்து வருகின்றது. தமிழினம் தன் சொந்த நாட்டில் பாதுகாப்பற்ற இனமாக கொலைவெறிக்கும், கொடூரத்திற்கும் ஆளாகும் இனமாக வாழ்ந்து கொண்டிருக்கிறது. இன்றைய தமிழ்த் தலைவர்கள் போராடும் தமிழ் இளைஞர்களைக் காட்டிக்கொடுப்பவர்களாக, ஆட்சிக்குத் துதிபாடுபவர்களாக மாறியிருந்தாலும்கூட, தமிழ் இளைஞர்கள் அநியாயமாகச் சிறையில் வாடும்வரை, தமிழினம் சுதந்திர இனமாக, ஏனைய இனங்களுடன் சமத்துவத்துடன் வாழும்நிலை பெற்ற இனமாக மாறும்வரை எம்மால் சுதந்திரத்தைப் பற்றித் தான் சிந்திக்க முடியுமே தவிர கொண்டாட்டங்களைப் பற்றிச் சிந்திக்க முடியாது'

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(10-ம் பக்கம் பார்க்க)

உ

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்தார்த்தி வருஷம் தைமாதம் 21-ம் திகதி (4-2-80) திங்கட்கிழமை முற்பகல் 1-55 முதல் 1 மணிக்குள் வரும் இடப லக்கின சுப முகூர்த்தத்தில்,

எனது சிரேஷ்ட புத்திரன் திருநிறைசெல்வன்
தியாகராஜா
(ஆசிரியர்,ஆசிரியகலாசாலை, பண்டாரவளை)
அவர்களுக்கும்

எமது ஏக புத்திரி திருநிறை செல்வி
ஜானகி
அவர்களுக்கும்

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மண்டபத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர குடும்பசமேதரராய்ச் சமுகம்தந்து சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேம்.

வரவேற்பு: 6-2-80 மாலை 4 மணி - 8மணி மணமகளில்லம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி உருக்குமணி வையித்திலிங்கம்
பூதனடைப்பு, காரைநகர்

நா. நாகலிங்கம் தம்பதிகள்
''பழனி''
வேலணை கிழக்கு, வேலணை (4856)

எண்ணை விலை அதிகரிப்பு

## அமிர்.நிலை குறித்து ஜே. ஆர். கருத்து

(கொழும்பு)

எண்ணை விலை இலங்கையில் மட்டும் ஏற்பட்டுவிடவில்லை. இது ஒரு சர்வதேசப் பிரச்னை. இந்த நிலையை உணர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இந்நிலை குறித்துத் தெளிவான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தங் காலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினுர்.

எண்ணை விலை அதிகரிப்போ ஏனைய பொருட்களின் விலை ஏற்றமோ அரசின் தவறினுலோ கவனக்குறைவினுலோ ஏற்பட்டதல்ல. இந்நிலையைச் சமாளிக்கச் சகல மக்களும் ஒருமுகமாக முன்வரவேண்டும் என்றும் திரு. ஜெயவர்த்தன கூறினுர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுகதர்மம் நாற்காலிக்காரர்

## இன்று மேடையேறும் இருநாடகங்கள்



யுகதர்மம் நாடகம் மூலம் தமிழுக்கு அறிமுகமாகும் உலக நாடகாசிரியன் பெர்டோல்ட் பிஃெக்ட்.

உலக நாடகாசிரியன் பெர்டோல்ட் பிரெஃக்டின் நாடகம் ஈழத்தமிழ் நாடகஉலகில் அறிமுகப்படுத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும். நாடகம் பற்றிய பிரக்ஞையையும் தரமான நாடகரசரனையையும் மக்கள் மத்தியில் உருவாக்குவதனைநோக்கமாகக் கொண்டியங்கும் இலங்கை அவைக்காற்றுக் கழகம் பெர்டோல்ட் பிரெஃக்டின் 'The Exception and the Rule' என்ற நாடகத்தை 'யுகதர்மம்' என்ற தலைப்பில் அறிமுகப்படுத்துவது நல்ல முயற்சியாகும். பிரெஃக்டின் நாடகங்களை வெறும் மொழிபெயர்ப்பு என்று தள்ளிவிடுவதற்கில்லை. எமது சொந்தப் பிரச்னைகளைப் பார்க்க மறுத்து மொழிபெயர்ப்பில் தஞ்சம்புகும் விவகாரம் எனக் கருதுகிற இலக்கியக் குருட்டுத் தனமும் ஆகாது. பிரெஃக்ட் எப்போதோ தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். காலந்தாழ்த்தியெனினும் இப்போதாவது தமிழில் அறிமுகப்படுத்துவது காலத்தின் தேவையை உணர்ந்த முயற்சியாகும். இத்தேவையை உணர்ந்து இலங்கை அவைக்காற்றுக் கலைக்கழகம் தமிழ் நாடக உலகில் மேற்கொண்டுள்ள முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. 'கண்ணாடி வார்ப்புகள்', 'ஒரு பாலை வீடு', 'புதிய உலகம்' பழைய இருவர்' ஆகிய நாடகங்களின் வரிசையில் 'யுகதர்மம்' நாடக மேடையேற்றம் ஒரு வரலாற்று நிகழ்வு என்பதில் ஐயமில்லை.

நிர்மலா நித்தியானந்தன் தமிழில் மொழிபெயர்த்துள்ள நாடகத்திற்கு ச. வாசுதேவன் உயிர்த்துடிப்போடு கூடிய பாடல்களை எழுதியிருக்கிறார். பரீட்சார்த்த இசையில் ஈடுபாடு மிகுந்த கண்ணன் இந்த நாடகத்திற்கு இசை அமைத்திருக்கிறார். மொரட்டுவ பல்கலைக்கழக மாணவர்களே இந்த நாடகத்தின் நடிப்பில் பூரண பங்கேற்கின்றனர்.

சமுதாய இயக்கத்தில் பல்கலைக்கழகங்களுக்கும் பாரிய பங்குண்டு. பல்கலைக்கழகங்களையும் மக்கள் கூட்டத்தையும் இருவேறு துருவங்களாக்கி பூச்சாண்டி காட்டுகின்ற இலக்கிய வாதிகளின் பொய்மையைத் தோலுரித்துக் காட்டவேண்டியது அவசியமாகும். சமூகப் பொறுப்புணர்வோடு மொரட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் மார்க்ஸிய நாடகாசிரியன் பிரெஃக்டின் நாடகங்களை மேடையேற்ற முன்வந்திருப்பது பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். தமிழ் நாடக உலகை முன்நடத்திச் செல்பவர்கள் இவர்களேயன்றி வெறும் வரட்டு மேடைக் கூச்சல்களோ, பொய்ப் பிரச்சாரங்களோ அல்ல.

'யுகதர்மம்' என்ற நாடகத்தோடு மேடையேறும் ந. முத்துசாமி எழுதிய 'நாற்காலிக்காரர்' ஓர் அரசியல் நாடகமாகும். சினிமா வசனங்களைக் கேட்டு மரத்துப்போன ரசனைக்கு சொற்செட்டோடும் கட்டுக்கோப்போடும் முத்துசாமி எழுதியுள்ள நாடகம் புதிதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. விளங்கவில்லை என்ற கூச்சல் குப்பை சினிமா ரசனையில்-பாமர ரசனை வரட்சியிலிருந்து எழுகுறது.

ஏற்கனவே யாழ்ப்பாணம், கொழும்பு, பேராதனை ஆகிய இடங்களில் வெற்றிகரமாக மேடையேற்றப்பட்ட இந்த இரு நாடகங்களும் ஐந்தாவதுதடவையாக இன்று யாழ். வீரசிங்கம்மண்டபத்தில் மாலை 6-45 மணியளவில் மேடையேறுகின்றன.

இன்று ஈழத்து நாடக உலகின் முன்னணி நெறியாளராகத் திகழும் திரு. க. பாலேந்திராவின் நெறியாள்கையில் இவ்விரு நாடகங்களும் மேடையேறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று மேடையேறும் 'யுகதர்மம்', 'நாற்காலிக்காரர்' ஆகிய நாடகங்கள் நாடக ரசனையை மேலும் ஒரு படி வளர்க்க உதவுமெனலாம்.

-என். பி. எ

## கும்பாபிஷேகம்

சரவணை புன்னஞ்சிமால் அருள்மிகு ஸ்ரீவீரபத்திரர் சுவாமி தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேகம் இம்மாதம் 6-ம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் அபிஷேகமும், இம்மாதம் 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு பொங்கல் வழிபாடும், மண்டலபூர்த்தியும் நடைபெறும். பிரதிஷ்டா குரு, வேதாகமபூஷணம் சிவ. ஸ்ரீ நா. யோகீஸ்வரக்குருக்கள் இதனை நடத்திவைப்பார். நாதஸ்வரக் கலைஞர் பி. எஸ். பிச்சையப்பா குழுவினரின் மங்கள வாத்தியம் விசேட நிகழ்ச்சியாக இத் தினத்தில் நடைபெறவுள்ளது.

## பாடசாலைக்கு புதிய கட்டிடங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தொகுதியில், பல தமிழ், முஸ்லிம்பாடசாலைகள், புதிய கட்டிடத்திற்கான வாய்ப்பைப் பெறுகின்றன.

இதற்கிணங்க மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரையினால் ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் கீழ், கன்னங்குடா மகாவித்தியாலயம், அரசடி மகாவித்தியாலயம், சிவானந்தா வித்தியாலயம் ஆகியவை அடுக்குமாடிக்கட்டிடங்களைக் கொண்டதாகவும் கல்லடி வேலூர் கொலனி, திருப்பெருந்துறை, மோர்சாப்பிட்டி, சத்துருகொண்டான், தாண்டியடி ஆகிய இடங்களில்புதிய ஆரம்பப்பாடசாலைகளும் அமைய உள்ளன.

மட்டுநகர் இரண்டாவது எம். பி. ஜனுப் பரீத் மீரா லெப்பையினுல் நிதி ஒதுக்கப்பட்டதற்கிணங்க ஏறுவூர் அலிகார் மகாவித்தியாலயம், காத்தான்குடி மகாவித்தியாலயம், காத்தான்குடி அல்மூனிரா வித்தியாலயம், ஆரையம்பதி மகாவித்தியாலயம், ஏறுவூர் காளிகோவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மட்டக்களப்பு மெதடிஸ்த மத்தியகல்லூரி, புல்லுமலை றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலை, புல்லுமலை சிங்கள வித்தியாலயம் ஆகியவைகளில் புதிய கட்டிடங்கள் அமைகின்றன.

......

### மானிப்பாய்தொகுதி

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்

(யாழ்ப்பாணம்)

புதிய திட்டத்தின்கீழ் மானிப்பாய்த் தொகுதிக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் தலைவராக சண்டிலிப்பாய் உதவிஅங்சாங்க அதிபர் திரு. எஸ். கோபாலரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார். இச்சங்கத்தின் இயக்குநர்களாக திருவாளர்கள் ஆர். எஸ். அலோசியஸ், ம. பாலநாதன், இ. யேக்கப், இ. அமிர்தநாதன், ஞா. அன்ரன், ம. பேரின்பநாயகம், உ. ந. தேவகடாட்சம், தேவதாசன் ஆகியோர் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. ஞானப்பிரகாசத்தினல் நியமிக்கப்பட்டுள்ளனர்,

மானிப்பாய்த் தொகுதிக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று வேண்டுமென்ற கோரிக்கை 'ஈழநாடு' பத்திரிகைமூலம் வலியுறுத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

......

## மட்டக்களப்பு நீதிமன்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் புதிதாக அமைந்துவரும் நீதிமன்றக் கட்டிடவேலைகள் இரவிலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

உயர்நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மஜிஸ்திரேட் நீதிமன்றம் போன்றவை இக்கட்டத்தில் ஒருங்கே அமைகின்றது. புதிதாக அமையப்பெற்றுவரும் நீதிமன்றத்தின் ஒருபகுதி யூன் மாதம் ஆரம்பிக்கப்படும்.

## அரிசி விலை அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புச் சந்தையில், அரிசி முன்னர் என்றுமே இல்லாதவாறு அதிக விலையில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கொத்து அரிசியின் விலை ஆறு ரூபாய் 75 சதம்வரை விற்பனை செய்யப்படுகிறது. இதுவரை அரிசி [illegible] செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கொழும்புத்துறை சுவாமியார் ஒழுங்கையில் தபாற்கந்தோருக்கும் பிள்ளையார் கோவிலுக்கும் சமீபத்தில் வீடு கட்டுதற்குரியஇரண்டு(2) பரப்புக் காணி. தொடர்பு இல. 27, சுவாமியார் வீதி. 4860

வீடு கட்டுவதற்கு ஏற்ற 3 பரப்புக் காணி கொக்குவிலில் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். C. பொன்னையா, றெயில் றேட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 4864

நல்ல நிலையில் உள்ள 9 ஸ்ரீ 6000 தொடர் இலக்கம் கொண்ட ஒஸ்டின் கேம்பிறிச் (பிரிஞ) புளேபோட் கியர், பகுதி மாற்றத்திற்கு அல்லது விற்பனைக்கு உண்டு. திசா ரொயிஸ் இன்டஸ்ரீஸ், 70, மானிப்பாய் றேட், யாழ்ப்பாணம். 4857

புதிய வீட்டுடன் 3¾ பரப்புக் காணி சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடி, நல்லூர் மார்க்கட்டுக் கருகாமையில் உண்டு. பயன்தரும் தென்னை, மா உண்டு. தொடர்புகொள்ளவும். தி. சுமாரசாமி, சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடி, நல்லூர். 4821

பளை, இயக்கச்சியில் நல்ல நிலையிலுள்ள தென்னங்காணியில் ஒரு பகுதியான இருபத்தைந்து (25) ஏக்கர் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: கணேச தோட்டம், இயக்கச்சி. 4795

### வாடகைக்கு

கொக்குவில் புகையிரத நிலையத்தில் இருந்து அரை மைல் தூரத்தில் நீர், மின்சக்தி முதலிய வசதிகளுடன் அமைந்த வீடு வாடகைக்கு தேவை. சி. பரமேஸ்வரன், உயிரியல்ரசாயனத் துறை, மருத்துவபீடம். கைதடி. 4863

Brownson
வாங்குங்கள் பிரவுண்சன் அரறூட்-மா
பிரவுண்சன் அரறூட மா அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப் படுத்தப்பட்டது.

### FOR SALE

Protect your Refrigerator, Deepfreezer or expensive Sterio Equipment with a Jinsa Automatic Electronic Voltage Minder. Guaranteed protection against low or high voltage fluctuations. Available with the Sole Agents in Jaffna - Walkers, Stanley Road. 4861

### தேவை

பசுமாடுகளைப் பராமரிக்கவும், தோட்டவேலை செய்வதற்குமாக வேலையாட்கள் உடன் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் 5-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும். அதிபர், சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம். 4855

501 ஸ்ரோசன் வகன் தேவை. திசா ரொயிஸ் இன்டஸ்ரீஸ், 70, மானிப்பாய் றேட், யாழ்ப்பாணம், 4858


## வங்கி மோசடி: இருவரும் பிணையில்!

(யாழ்ப்பாணம்)

வங்கியொன்றில் இருந்து 15 ஆயிரம் ரூபாவை மோசடி செய்ததாகப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட வங்கி பியோனும் அவரது நண்பரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தலா ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள வங்கி ஒன்றில் ஒருவரின் பேரில் வைக்கப்பட்டிருந்த பணத்தை மோசடி செய்ததாக அவ்வங்கிப் பியோனை குருசுமுத்து அன்ரன் றேஜ் என்பவரையும் அவரது நண்பன் சத்தியசிலன் என்பவரையும் யாழ். விசேட புலனாய்வுப் பகுதிப் பொறுப்பதிகாரி சார்ஜன்ட் பிள்ளை கைதுசெய்து யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது சந்தேக நபர்கள் இருவரும் தலா ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மோசடி செய்யப்பட்ட 15 ஆயிரம் ரூபாவும் மீண்டும் செலுத்தப் பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

(கொ)


## தொழிலாளி தேவை

இயக்கச்சி தென்னந்தோட்டத்தில் வேலை செய்ய, வேலைக்கேற்ப நல்ல மாத ஊதியம் கொடுக்கப்படும். 80 நேரி சமுகமளிக்கவும்.

கணேச தோட்டம்

கோயில் வயல் தரு, இயக்கச்சி.

4842

## இன்று

ஐந்தாவது தடவையாக மேடையேறுகிறது!
இலங்கை அவைக்காற்று கலைக்கழகத்தின்
இரு நாடகங்கள்

### யுகதர்மம்
### நாற்காலிக்காரர்

நெறியாள்கை: க. பாலேந்திரா
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
மாலை 6 45 மணிக்கு
ரிக்கற்: 10/-, 5/-, 3/-, மண்டபவாயிலில்
4862


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# "காட்டுக் கோழி"

### த. சண்முகசுந்தரம்

அலுவலக வேலை முடித்ததும் வெளியே வந்தேன். புறாக்கூடுபோன்ற உயர்ந்த மாடிக் கட்டிடத்தில் எட்டு மணிநேரம் அடைபட்டுக்கிடந்ததினால் ஏற்பட்ட அலுப்பு ஒரு புறம்; தட்டச்சுடன் மாரடித்ததினால் ஏற்பட்ட சோர்வு மறுபுறம். நானோ கமக்காரனின் மகன். சுமாராகப் படிப்பேன். தந்தையாரின் விருப்பப்படி காற்சட்டை போடுகின்ற உத்தியோகத்தைப் பார்த்துவருகிறேன். இருந்தும் என் உள்ளம் யாழ்ப்பாணத்திலுள்ள புலம், பற்றைக்காடு, பனந்தோப்பு என்பவற்றையே நாடியிருந்தது. உண்மையைச் சொன்னால் அப்பு - அதாவது பப்பா - தான் என்னை இன்றும் பார்க்கிறார். மனைவியும் ஒரு பிள்ளையும் ஊரிலே. நான் கொழும்பிலே. வீட்டிற்கு ஒரு சதமும் அனுப்புவதில்லை. ''உன் உழைப்பு, உனக்கு. தங்கச்சியையும் குழந்தையையும் நான் பார்க்கிறேன்'' என்பார் அப்பு. தோட்டச் செய்கையால் அவருக்கு ஆண்டுதோறும் பத்தாயிரம், பதினையாயிரம் என்று தேறும். ஆய்ச்சியின் சில்லறை வியாபார வரும்படி வேறு. எனக்குக் குறையில்லை, இராசாவாக இருந்தேன். பெயரும் சிவராசாதான்.

நடைபாதையால் விரைந்து வந்தேன். ''இயற்கை விஞ்ஞானக் கழகத்தின்'' இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்ணைச்செலுத்தினேன். ''பேச்சு இலங்கைக் காட்டுக் கோழி - பேராசிரியர் பேரம்பலம்:' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனக்கும் பேராசிரியர் பேரம்பலத்திற்கும் நெருங்கிய தொடர்பிருந்தது! நான் அவருக்கு ஒழுங்காக ஓய்வுநேரத்தில் தட்டெழுத்துத் திருப்பணி' செய்து என் வருமானத்தைப் பெருக்கிக்கொள்வேன். கல்விப் பொதுத் தராதர உயர்தரத் தேர்வில் உயிரியல் பிரிவிலே கற்று நான்கு பாடங்களிலும் சிறப்புச் சித்தி பெற்றவன்தான். பல்கலைக் கழகம் என்னும் வெட்டியான் தரப்படுத்தல் என்னும் பெயரில் என் மேற்படிப்பு ஆசையைச் சிரச்சேதம்' செய்தது. இது தரப்படுத்தல் என்னும் தர்மத்தில் சேரும். இதனால் பேராசிரியர் பேரம்பலத்தின் கட்டுரைகளைப் பொருள் விளங்கித் தட்டச்சில் பொறித்துக் கொடுக்கின்ற திறமை எனக்கிருந்தது. இந்தப் பேச்சையும் நான்தான் சிரமப்பக் கொடுத்துப் பேராசிரியர் பேரம்பலத்தின் பாராட்டையும் பெற்றேன்.

இயற்கை விஞ்ஞானக் கழகத்தின் இந்த வனவிலங்குப் பாதுகாப்புக் கூட்டம் சிறப்பாக நடைபெறும் கூட்டத்திற்குச் செல்லும் நோக்கத்துடன் நேரத்தைப் பார்த்தேன். மணிக்கூடு கூட என்னுடையது இல்லை. அம்மான் அதாவது மாமா - வாங்கித் தந்தது. என் அறைக்குச் சென்று என்ன செய்யலாம் போய்த்திரும்பக் கூட்டத்திற்கு வரப் பேருந்துச் சத்தம் என்னிடமில்லை. ஆகவே நேராக விஞ்ஞானக் கழக மண்டபத்திற்குள் புகுந்தேன். பேராசிரியர் கண்ணிலே படவேண்டும். பேச்சு முடிந்ததும் இறுக்கிக் கைதட்டி அவரின் பாராட்டைப் பெறவேண்டும். இதுவும் என்நோக்கம். கடலை வடையையும் வெறும் சாயத்தையும் குடிக்கலாம் என்றால் அதற்கும் எனக்குப் பொருளாதார நெருக்கடி இருந்தது. நேரே மண்டபத்துள் புகுந்தேன்.

''அழைப்புப் பெற்றவர்களுக்கு மட்டும் பிரவேசம்'' எனப் பல்கலைக் கழகத்து விரிவுரையாளர் ஒருவர் சொன்னார். ''சரிதான் போகலாம்'' என உள்ளுக்குள் நினைத்துக் கொண்டு 'நன்றி' என உரத்து அந்த விரிவுரையாளரைப் பார்த்துப் பல்லைகாட்டினேன். என் குரல் பேரம்பலத்திற்குக் கேட்டுவிட்டது.

''மகேன்! இவர் என் பகுதி நேரத் தட்டெழுத்தாள நண்பன். வரவிடுங்கள் அழைக்கவிருந்தேன். பின்னர் ஏதோ மறதி'' என்று அந்த விரிவுரையாளரை பார்த்து ஆங்கிலத்திலே கூறினார். பின்னர் என்னைப் பார்த்து ''இராசா மன்னிக்கவேண்டும் மறந்துவிட்டேன்'' என்றார்.

''அதனால் ஒன்றுமில்லை ஐயா!'' என்றேன். ''மகேஸ் தேநீர் விருந்திற்கு ஆயத்தமோ'' இராசாவும் வாருங்கள்'' என்றார். கடலை வடையும் வெறும் சாயமும் என் கண் முன்னே தோன்றின. தோன்றி மறைந்தன. தேநீர் விருந்து மிகவும் சிறப்பாக நடந்தது. என் வயிறு வெடிக்கும் போலாகிவிட்டது. பேராசிரியரின் மகள் என்னிடம் வந்து ''மாமா'' இன்னும் ஒன்று துண்டுக் கேக்'' என்று நீட்டினாள். இரவு கடைச் சாப்பாட்டிற்குக் கொட்ட வேண்டிய பணம் மிச்சமாகும் என்ற நினைவில் எல்லாச் சிற்றுண்டி வகைகளிலும் இரண்டு பிடி'' பிடித்தேன் அப்படி உண்பதில் எனக்கு ஆறுதல். கூட்டத்திற்கு அலுவல் விளங்கியவரும் வந்திருந்தனர். அலுவல் விளங்காதவர்களும் வந்திருந்தனர். கனவான்களோ தமது உடை, கழுத்துப்பட்டி, மோட்டார் வண்டி, தொலைக்காட்சிப் பெட்டி என்று பேசினர். அரிவையரோ சேலை, சேலைத் தலைப்பு, சருகை, குளிர் சாதனப் பெட்டி எனப் பேசினர். இந்தப் பேச்சிலே கலந்துகொள்ளக் கமக்காரனின் மகனாகிய எனக்குத் தகுதியில்லை' இது வெளிப்படை, ஆனால் காட்டுக்கோழிபற்றி எனக்கு நிறையத் தெரியும்? தேநீர் விருந்து முடிந்தது. சரியாக ஆறுமணிக்குக்கூட்டம்தொடங்கியது. பேராசிரியரின் ஆய்வுரை விளங்காத பெரியார் பலரும்மல்லாத்திவிட்ட ஆமை போலக் கதிரையில் கிடந்துவிட்டனர். பேராசிரியரின் குரல் இனிமையானது. அதில் மிடுக்கும் கலந்திருக்கும். பேச்சு வழக்கு சொல்லுக்குச்சொல் தெரியும். எனக்கு அதுபற்றிய விளக்கமும் கூடுதலாக இருந்தது.

இறுதியாகப் பேராசிரியர் தன் கொகுப்புரையை நடத்தினார். இலங்கைக் காட்டுக் கோழி உயிரியல் அடிப்படையில் மிகவும் பழமையானது என்பதை அவர் கூறினார். மனிதன்இன்று பரந்தகாட்டை அழித்துத்தோட்டமாக்கிறான். ஆகவே காட்டுக்கோழி தன் இயற்கைச் சூழ்நிலையில் வாழ முடியாமல் அழியும் நிலையில் இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். மேலும் அது ஒருமுறையில் இரண்டு, மூன்று முட்டையை இட்டு அடைகாத்துக் குஞ்சுபொரிக்கும். ஆகவே அதன் இனவிருத்தி வேகம் குறைவு எனவும் அவர் சுட்டிக்காட்டினார். போதாக் குறைக்கு வேட்டைக்காரர் கண்டபடி காட்டுக்கோழியைச் சுட்டுத்தள்ளுகின்றனர் எனவும் பேராசிரியர் வருத்தத்துடன் தெரிவித்தார். இதனை விடக் காட்டுக்கோழிக்குப் பருந்து. வல்லூறு, பாம்பு, கீரி, குள்ளநரி போன்ற இயற்கை எதிரிகளும் இருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டுத் தன் பேச்சை முடித்தார். அதற்கு முன்னர் ஒரு குறிப்பையும் சொன்னார், 'காட்டுக் கோழியைப் பாதுகாப்பது எமது கடமை என்றார். 'காட்டுக்கோழிச் சேவல் மிகவும் ஆண்மை நிரம்பியது, மிகவும்வீரம்உள்ளது. சண்டை வந்தால் விட்டுப்போகாது, கடைசிவரையும் போராடும். அதனுடைய எல்லைக்குள் இன்னுமொரு வேறு சேவல் வந்து சிறகடித்தால், கூவினால் மறைவிலிருந்து வந்து கொத்துப்படும், எமதுமத்தியில் பெருந்தன்மையில்லாத வேட்டைக்காரர் இருக்கின்றனர். இவர்கள் பற்றைக்கு முன்னால் நின்று லேசாகக் கைதட்டுவர். பின்னர் சேவல்கள்போலக் கூவுவர், மறைவிலிருக்கும் சேவல் செட்டையை அடித்துக்கொண்டு சண்டைக்கு வந்துவிடும். இது கௌரவமற்ற வேட்டை' என அழாக்குறையாகப் பேரம்பலம் கூறினார். பலரும் பேராசிரியரைப் பாராட்டினர், குறிப்புக் கூறினர், நன்றியுரையும் கூறப்பட்டது.

கூட்டம் முடிந்தது, பேராசிரியர்கள் அழைப்பின்பெயரில் அவரின் மோட்டார் வண்டியில் ஏறினேன். என் அறையும் பேராசிரியரின் பங்களாவும் கிட்டக்கிட்டத்தான் இருந்தன. போகும்பொழுது போராசிரியரின் உச்சி குளிரப் பேசினேன். இதனாலோஎன்னவோ தெரியாது பேராசியர் என்னைப் பார்த்துப் பேசினார்,

'இராசா! என்னுடைய அடுத்த பேச்சுக் காட்டுப் பன்றி பற்றியது. வீட்டிற்கு வாருங்கள். கை எழுத்துப்பிரதி இருக்கின்றது, அதனை எடுத்துத் தட்டச்சில் போட்டுத் தாரும். வீட்டிலே இராச்சாப்பாடும் இன்று என்னுடன் தான்.'

'நல்லது ஐயா!' என்றேன், பேராசிரியர் இரா விருந்து பெயர் போனது. அடுத்த பேச்சை அடித்துக்கொடுத்தால் மேலும் ஐம்பதோ, நூறோ தேறும். இப்படி யோசிக்கமுன்னர் பேராசிரியரின் அந்தக் சொகுசு வண்டி அவர் வீட்டின் முகப்பிலேயே போய் நின்றது. நான் மிகவும் பணிவுடன் இறங்கி மோட்டார் வண்டியின் கதவைத் திறந்துவிட்டேன். மிகவும் மிடுக்காக அவர் இறங்கினார். இறங்கியதும் அங்கிருந்த ஒருவனைக் கண்டுவிட்டார்.

'என்ன பழனி? மீண்டும் வந்துவிட்டாய்?' என்றார்.

'ஆம், சாமி. துரை, தங்களோடு பேசவேண்டும்.'

'சரி, இரு. போய் உடுப்பு மாற்றிவிட்டு வருகிறேன்' என்று கூறிய பேராசிரியர் உள்ளே போனார். அங்கிருந்த உருவத்தைச் சற்றுக் கவனித்தேன். ஆறு அடி உயரமுள்ள அந்தக் கிழவன் சற்றுக் கூனியிருந்தான். அந்தக் கூனலில் அடக்கமும், ஏமாற்றமும், வறுமையும் பிரதிபலித்திருந்தன. அடங்கி அடங்கி வாழ்ந்து அடக்கப்பட்ட ஒரு சமுதாயத்தின் பிரதிநிதி அவன். வறுமை, கடின உழைப்பு, அகாலமூப்பு இவற்றால் கூனல் ஏற்பட்டதோ அல்லது அடங்கி ஒடுங்கி வாழ்ந்ததினால் கூனல் விழுந்ததோ என நான் ஆராய்ச்சிசெய்தேன்.

உள்ளே போன பேராசிரியர் உடையை மாற்றிவிட்டு 'ஒன்றிரண்டைப் போட்டுக் கொண்டு' வெண் சுருட்டுடன் வந்தார்.

'சரி பழனி! சொல் உன் கதையை' என்றார். அதில் ஏளனம் பிரதிபலித்தது. பழனி பேசத்தொடங்கினான்.

'ஐயா! சாமி! துரை, வணக்கம். உங்கள் உப்பைத் தின்று வாழ்பவன் நான். என் குடும்பமும் அப்படியே. உங்கள் வவனியாத்தோட்டத்தில் இருபது வரியம் வாழ்ந்து வருகிறேன். என் உழைப்பெல்லாம் உங்களுக்குத்தான், சம்சாரம் முத்துக்குட்டிதான் என்னை இங்கு போகச் சொன்னாள். குடிசை ஒழுகுகிறது. மேயவேண்டும். மழைபெய்தால் இருக்கமுடியாது. அந்த ஓட்டை வாடியில் படுத்து எழும்பமுடியாது. என் பெண் குழந்தை ஒன்று மழையில் நனைந்து சன்னி வந்து இறந்துவிட்டது. கடும்மழை. மழையோடு போட்டிபோட்டுக் கண்ணீர் விட்டுத்தோட்டத்து மூலையிலேதான் சவத்தைப் புதைத்தேன்' பழனி விம்மினான்.

'எத்தனை குழந்தை' என்றார் பேரம்பலம்.

'எட்டுச்சாமி.ஒன்று இறந்துவிட்டது. இப்பொழுது ஏழு. மூத்தது தங்கள் வீட்டில்'என்றான் பழனி. பழனி தொடர்ந்து பேசினான்

'வேலியடைக்கவேண்டும்' இரவிலே காட்டுப்பன்றியின் தொல்லை வேறு. இராமுழுவதும் மாறி மாறிக் காவல். துலாக்குத் தோட்டா முடிந்துவிட்டது. இரவிலே தூங்குவதுகூடப் பயம்தான். சாமி! துரை! நான் சம்சாரம்,பிள்ளைகள் ஆறும் உங்கள் தோட்டத்தில் இராப்பகலாக உழைக்கிறோம். ஏதாவது கூட்டிக் கொடுங்கள். பஞ்சம் பசி சாமி. விலைவாசி விசம்போல ஏறுகிறது எனப் பழனி சிணிங்கினான்.

'நல்லது. பார்த்துச் செய்வோம், என்றார் பேராசிரியர்.

'சாமி! அத்துடன் நல்ல செய்தி. என் மூத்தவளுக்கு உங்களோடு இருக்கிற மீனாவிற்குக் கலியாணப் பேச்சு. என் அக்கா மகன்தான் மாப்பிள்ளை. வெறுமனே மீனாவைத் தந்தால் போதும் என்கிறான் என்றான் பழனி. பின்னர் சிரித்தான்.

'மீனா! மீனா இங்கு வா!' என்றார் பேராசிரியர். எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த அழகிய பணிப்பெண் மீனா வந்தாள். பழனியின் மகள் மீனா என்று சொல்லவே முடியவில்லை. நல்ல கறுப்பி வாட்டசாட்டமான உடல். துப்புரவான உடுப்பு.பேராசிரியர் வீட்டிலே கொட்டிச் சிந்துவதை உண்பதினால் மீனாவின் உடல் வளர்ந்தது. பேராசிரியரின் மகள் கழித்துவிடுகின்ற உடுப்பு அவளின் உடலை அழகுபடுத்தியது. மீனா நான் பேராசிரியரின் வீட்டு வேலைக்காரி. தந்தை பழனியும் மகள் மீனாவும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். பார்த்துப் பேசினர் பார்வை மூலம்,

'மீனா உனக்குக் கலியாணப் பேச்சு' என்றான் பழனி. மீனாவின் அழகிய உருவம் நாணிக் கோணியது. பேராசிரியர் செருமினார்.

'இப்போதும் மீனாவை விட முடியாது. உன் இரண்டாவது மகளை இங்கே கொண்டு வந்துவிடு. அவள் வேலை பழகியதும், மீனாவை மூன்று மாதம் செல்ல அழைத்துப் போய்க் கலியாணம் செய்' என்றார் பேரம்பலம்.

'நல்லது சாமி. எங்களுக்கு ஏதாவது சம்பளம் கூடப் போட்டுத்தாருங்கள். மீனாவுக்கும் ஏதாவது இனும் துரை. உங்களோடு ஏழு வரியம் நின்றது சாமி' எனப் பழனி இரந்தான்.

'ஒன்றுமே தரமுடியாது. நீங்கள் வேண்டுமானால் தோட்டத்தை விட்டு எழும்புங்கள். மீனாவையும் உடனே அழைத்துச் செல்லுங்கள்' என்று பேரம்பலம் எந்த உணர்ச்சியும் இல்லாமற் பேசினார். பழனி உதுவும் பேசவில்லை. எதனையும் எதிர்க்கக்கூடிய வலு அவனுக்கில்லை. அவன் இயல்பே அப்படி. சில நிமிடங்கள் மௌனம் நிலவியது. காட்டுக்கோழி பற்றிய பேராசிரியர் பேரம்பலத்தின் பேச்சு என் காதில் ஒலித்தது. பின்

(9ம் பக்கம் பார்க்க)

---

## 'அண்ணா!' உனக்கு எம் அஞ்சலிகள்

பதினோராண்டுக் காலம் பதைப்பீந்து
மறைந்த தையா,
படைத்தலைவா; பைந்த மிழின் காவலன் நீ
மறைந்தின்று
கதி நீயே யென் றெண்ணிக் கலங்கி
அன்று அழுது நின்றோம்
கண்ணீரால் தமிழன்னை கண்ணீரை
மறைத்திட்டோம்!

சாதிப்பேயுடன் மூடத் தனப்பழக்கம்
அவை விரட்டி,
சாணக்கியத்தாலே சால்புவழி பலதிரட்டி,
பாதியிலே நின்ற தமிழ் பல்கவளம் தந்தாய் நீ.
பல்கு வளம் அத்தனையும் பரிந்தழ நீ
சென்றாயே!

இன்றோடு நீ மறைந்து பதினோராண் டானதுவே,
இதை யெண்ணுந் தமிழ் நெஞ்சம்
ஏக்குற்று வெடித்திடுமே.
என்று இனிநாம் அடுக்குமொழி
எழில் பேச்சுக் கேட்போமோ?
இன்பநறுங் கலைகளொடு ஈர்க்கும்நடை
சுவைப்போமோ?

என்று எண்ணித் தவிக்கின்றோம்.
இந்நூற்றாண்டின் தலைவா!
எம் அண்ணா! உன் மறைவால்
இழப்பொன்றே எஞ்சியது
இன்று நரைக்கோடி இருந்தமிழர் வணங்குகிறோம்.
இனிதாம் நல் நினைவுகளால்
ஏத்துகிறோம் அஞ்சலிகள்!!!

-ஆர். எம். கிருபாகரன்
(இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலக்கண்ணாடி

காலஞ்சென்ற கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் சகோதரர் ஹரீந்தரநாத் சட்டோபாத்யாயாவுக்கு 80 வயதாகின்றது. இந்த வயதிலும் இளைஞராகவே அவர் காணப்படுகிறார்.

இந்தி- வங்காளி - ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கவிதை எழுதுகிறார் - ஆங்கிலத்தில் நாடகம் எழுதி - தயாரித்து- நெறிப்படுத்துகிறார் - பாடுகிறார் - இசையமைக்கிறார்- நாட்டியமாடுகிறார். இவைமாத்திரமல்ல ரிஷிகேஷ் முகர்ஜி-சத்யஜித்ரே ஆகிய பிரபல தயாரிப்பாளர்களின் படங்களில் குணசித்திர பாத்திரங்களிலும் நடித்துப்புகழ்பெற்றிருக்கிறார். இவைகளுக்குகிடையில் தினமும் கடற்கரையோரமாக பல மைல்கள் நடக்கிறார்.

'எப்பொழுதுமே இளமைமாக இருங்கள்-வயதாகிவிடாதீர்கள்-அது அவசியமற்றது' என்கிறார் அவர்இளைஞர்களைப் பார்த்து.

●

உலகில் தங்கம் உற்பத்தி செய்யும் நாடுகளில் தென்னாபிரிக்காவே முதலிடம் வகிக்கின்றது. அங்கே தங்கச் சுரங்கங்களில் தொழில் புரிவது எந்த நிமிடமும் யமனோடு வாசம்செய்வதுபோலாகும். சுரங்கங்களில் காணப்படும் கற்பாறைகளைத் தகர்த்து தூளாக்குவதற்காக டைனமைட் வெடிவைக்கப்படுவதுண்டு. இதனால் அடிக்கடி உயிர்ச்சேதம் ஏற்படுகின்றது. தென்னாபிரிக்காவில் தங்கச் சுரங்க உரிமையாளர்களின் சங்கம் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையின்படி 1979-ம் ஆண்டு 12 மாதங்களில் 400,000 சுரங்கத்தொழிலாளர்களில் 524 பேர் சுரங்க விபத்துக்களில் பலியானார்களாம்.

சுரங்கப்பாறைகளைத்தகர்ப்பதற்கான புதிய யந்திரம் ஒன்றை இப்பொழுது கண்டுபிடிப்பதில் தொழில் நுட்ப அறிஞர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த யந்திரம் வந்ததும் அபாயங்கள் குறையுமாம்.

கடந்த பத்து ஆண்டுகளில் தென் ஆபிரிக்காவில் ட்ரான்ஸ்வால்-ஓரேஞ்பிஸ்ட் ஸ்டேட் பகுதியில் செயல்படும் 56 முக்கிய தங்க உற்பத்திக் கம்பனிகள் வருடம் 960 தொன் தங்கம் உற்பத்திசெய்துள்ளன. கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகள் உற்பத்தி செய்யும் தங்கத்தில் 60 வீதமாகும் இது.

உலக சந்தையில் தங்கத்தின் விலை ஏற ஏற தென்னாபிரிக்கச் சுரங்கத் தொழிலாளர்கள் பூமியின் அடிக்குக் கீழே இறங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

●

நம்நாட்டில் தங்கம் விற்கும் விலையைப் பார்த்தால் சாதாரண குடும்பத்தவர்கள் புதிதாக நகைகள் வாங்கும் எண்ணத்தையே கைவிடவேண்டியதுதான். சமூகம் மதிக்க வேண்டுமென்பதற்காக விரல் மொத்தத்தில் தாலிக்கொடி போடவேண்டும் என்று எதிர்பார்ப்பதும், சீதனம் கேட்பதைப் போன்ற காலத்துக்குதவாத ஒரு கொடுமையே! சமூகம் தானே திருந்துமென்று எதிர்பார்ப்பது மடமை. திருந்திநடப்பதே முன்மாதிரி.

●

றுத் பிரிங்க்மன் என்பவர் ஆஸ்திரியாவில் பிரபல்யமான ஒரு நடிகை. வியன்னாவிலுள்ள இங்கிலிஷ் தியேட்டரில் நடைபெற்ற ஒரு நாடகத்தில் 19 வித்தியாசமான பாத்திரங்களில் தோற்றினார். 2 மணி நேரமே நாடகம் நடந்தாலும் இந்த 19 பாத்திரங்களுக்கும் ஏற்றவகையில் 22 உடுப்புக்களை அவர் மாற்றி மாற்றி அணியவேண்டியிருந்ததாம்.

●

1979-ம் ஆண்டுக்கான இந்திய சாகித்திய அகடமி இலக்கிய பரிசு பெற்ற திரு. ஜானகிராமனுக்கு நகர வாழ்க்கையில் அதிக அக்கறையில்லை. புதுடில்லி, சென்னை போன்ற பெரிய நகரங்களில் பல ஆண்டுகள் வாழ்ந்துவிட்டபோதிலும் கிராமிய வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு எழுதுவதையே அவர் விரும்புகிறார். ஓய்வு பெற்ற பின்னர் மீண்டும் கிராமப் பகுதிக்குத் திரும்பி சிறப்பாகவும் வேகமாகவும் எழுத்துப் பணியில் ஈடுபட விரும்புவதாகப் பேட்டி ஒன்றில் கூறியுள்ளார் திரு. ஜானகி ராமன். காலஞ்சென்ற கு. ப. ரா. அவர்களே தமக்கு எழுத்துத்துறையில் அதிக ஊக்கமளித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

'பேனு'

---

## பேரறிஞர் சேர். பொன். அருணாசலம்

# இலங்கையில் தொழிலாளர் இயக்கத்துக்கு வித்திட்டவர்

இலங்கையில் தொழிலாளர்களின் ஐக்கிய சங்கத்தினைத் தொடக்கி வைத்தவர் சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களே! அச்சங்கத்தின் முதல் தலைவராகவும் விளங்கினார். அவரே தொழிலாளர் ஐக்கிய சங்கத்தின் தந்தை என்பதை மறக்கலாகாது. அப்பொழுது பிற்காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்கத்தில் தொழில் மந்திரியாகக் கடமையாற்றிய பெரிசுந்தரம் அவர்கள் அந்தச் சங்கத்தின் செயலாளராகக் கடமையாற்றினார்.

அருணாசலம் அவர்கள் தொழிலாளர்களுக்குச் சட்டபூர்வமாகக் குறைந்தபட்ச ஊதியம் பெறவும், தொழில் ஆற்றவேண்டிய காலவரையறைபெறவும், சிறுபிள்ளைகளை வேலைக்கு அமர்த்தப்படாதென்றும், பொருள் சம்பந்தமான உடன்படிக்கைகளை மீறுதற்குத் தொழிலாளர்களை மறியல்சாலைக்கு அனுப்பத்தண்டனை விதிக்கக்கூடாதென்று கிளர்ச்சிசெய்தார். தோட்ட முதலாளிகளின் கொடுமைகளை அருணாசலம் எதிர்த்து அரசாங்கத்துடன் விவாதித்து தொழிலாளர் நலனை நாடினார். 1920-ம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்தை நிறுவினார். இன்று நாம் இலங்கையில் காணும் சகல தொழிலாளர் இயக்கங்களுக்கும் வித்திட்டவர் சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களே.

### கல்வி மேதை

சிறுவர்களின் கல்வியில் கல்விமேதை அருணாசலம் அவர்கள் மிக நாட்டம் கொண்டனர். இலங்கைத் தாய்மொழிகள் ஆகிய தமிழ், சிங்களம் என்னும் இரு மொழிகளும் கல்வித்திட்டத்தில் இடம்பெறவேண்டும் என்று அயராது உழைத்தார்.

1917-ம் ஆண்டு இலங்கை சமூகசேவைத் தலைவராக விளங்கிய சேர். பொன். அருணாசலம் அவர்கள் கல்வித்துறை மேலதிகாரியைச் சந்தித்து கல்விநலன் பெறாத 20,000 சிறார்களுக்குக் கல்வி வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று அறிவுறுத்தினார். அதன்பயனாக காலையில் சிறுவர்களுக்கும் மாலையில் சிறுமிகளுக்கும் கொழும்பு கிறீன் வீதியிலுள்ள அரசாங்கப் பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஒழுங்குகள் செய்யப்பட்டன. அருணாசலம் அவர்கள் கொழும்பிலே கனிஷ்ட அரசாங்கப் பாடசாலை நிறுவத் தீவிர முயற்சிசெய்தார்.

### சமூகக் கல்விச் சேவை

சுகாதார வகுப்புக்களைத் தொடக்குவித்தார். ஆபத்து வேளைகளில் முதல் சிகிச்சை அளிக்க ஏற்ற கல்வி வசதிகளை அருணாசலம் அவர்கள் செய்தார். லண்டனிலுள்ள ரொயின்பி மண்டபம் எவ்வாறு சமூக சேவைசெய்வதற்கு உதவுகின்றதோ, அதே போல கொழும்பிலே மருதானையில் சமூகப்பணிச்சபை நிலையத்தை உருவாக்கினார். 1914-ம் ஆண்டு நவம்பர் 19ம்

## வரலாற்றுவாணர் வை. முத்துக்குமாரசுவாமி

திகதி பொன். அருணாசலம் அவர்கள் சில பிரமுகர்களை அழைத்து, கொழும்பு வாழ், ஏழைகளுக்குக் கல்வி, விளையாட்டு வைத்திய உதவி, ஆகக் குறைந்த சம்பளம், ஆயுள் காப்புறுதி முதலியன அளிக்கவேண்டிய அவசியத்தை அறிவுறுத்தினார். பொன். அருணாசலம் அவர்கள் ஒருநாளில் எட்டுத் தொடக்கம் பத்து மணித்தியாலங்கள் சமூகநலன் பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

வேந்தரின் ஆசிய உயர்சபையின் தலைவர். அது கற்றோரின் சிறந்த மன்றம். 1908-ம் ஆண்டு மேலேயுள்ள சபையின் துணைத்தலைவராக தெரிந்தெடுக்கப்பட்டார். 1917-ம் ஆண்டு மேலே உள்ள சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்த உயர்பதவியை ஏற்ற முதல் இலங்கைப் பேரறிஞர் பொன். அருணாசலம் அவர்களேயாவர்.

### வரலாற்று ஆசிரியர்

1906-ம் ஆண்டு பொன். அருணாசலம் அவர்கள் வெளியிட்ட 'இலங்கை வரலாற்றுக் காட்சிகள்' அவருடைய வரலாற்று நுண்ணறிவுக்குச் சான்றாக விளங்குகிறது.

பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் 1897-ல் சென்னையில் நல்லாசாமிப் பிள்ளை அவர்களால் தொடக்கப்பட்ட சித்தாந்த தீபிகைக்கு திருவாசகம், புறநானூறு, தாயுமானவர் சுவாமி பாடல்கள் முதலியவற்றின் ஆங்கில ஆக்கங்களை அனுப்பி அவை ஒழுங்காக வெளிவந்தன. அவை ஈடும் இணைப்பும் இல்லாதன.

1937-ல் சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் 'மெய்விளக்கவியல், சமயத் தத்துவக் கட்டுரைகளும் மொழி பெயர்ப்புக்களும்' என்னும் அருமருந்தன்ன நூலை வெளியிட்டார். அதற்கு ஓர் அரிய அணிந்துரையை சேர். சீ. பீ. ராமசாமி ஐயர் நல்கியுள்ளார். அந்நூலின் முக்கியம் என்னவெனில், அருணாசலம் அவர்கள் தமிழிலுள்ள மேற்கோள்களைத் தந்து, அவற்றுக்கு நேரான ஆங்கில மொழி பெயர்ப்பையும், உதவுகின்றார். மேலும் அதே கருத்துப் பெரும்பாலும் உள்ளவறறன், கிரேக்க மொழி நூல்களில் இருந்து மேற்கோள்களைக் கூறுகிறார். அவற்றில் எல்லாவற்றுள்ளும் தமிழ் நூலில் காணப்படும் கருத்துக்கள் மேலானவை. உன்னதமானவை என்று நிலைநாட்டுகின்றார் பொன். அருணாசலம் அவர்கள்.

### பல்கலைக்கழகத் தந்தை

இலங்கைத் தேசாதிபதிக்கு இலங்கையில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க ஆவனசெய்ய வேண்டுமென்பதை 1906-ல் வற்புறுத்திவந்தார். கொழும்பின் பிரதம அரசினர் கல்லூரியை(றோயல் கல்லூரியை) முதற்கண் பல்கலைக்கழகக் கல்லூரியாக உயர்த்தப்பட வேண்டுமென்னும் கருத்தைத் தெரிவித்தார். அவர் அவரது மைத்துனர் கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமியுடனும், எஃப். எல். உவூட்வேட் என்னும் கல்விப்பணியாளருடன் பல்கலைக்கழகத்தை உருவாக்கிச் சிறந்த முயற்சிகள் எடுத்து வந்தார். முதற்படியாக இலங்கைப் பல்கலைக்கழகச் சஞ்சிகையில் ஓர் ஆசிரியராக அமர்ந்து கடமையாற்றினார். அவருடைய கருத்துக்கள் சில இவை:-

'இலங்கைப் பல்கலைக்கழகம் ஒரு வேண்டுகோள். 'இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முக்கிய குறிக்கோள், மாணவர் தாய்மொழிகள், பழைய நாட்டு வரலாறு, கர்ண பரம்பரை ஆகியனவற்றில் ஆழ்ந்த பற்றுடையவராய் இருக்க வேண்டும். இந்த நிலையத்தில் ஆங்கில மொழியும் மேல் நாட்டு பண்பாடும் நன்கு பயன்படுத்தப்பட வேண்டும். தாய்மொழியினை இலகுவாகவும் மரபின்படியும் பயன் படுத்த இப்பல்கலைக்கழகம் நல்ல வசதிகள் அளிக்கவேண்டும். அவர்கள் 2400 ஆண்டுகள் பழமைவாய்ந்த சிறப்பான கலாசாரம் உடையவர்கள் என்பதை நன்குக உணர வேண்டும்.தேசிய இலக்கியம் பண்டிதர்களின் கைகளில் மட்டும் விட முடியாது. இந்நாட்டு ஆண், பெண் இளந்தலைமுறையினர், மேல் நாடு, கீழ் நாட்டுப் பண்பாடுகளையும், கருத்துக்களையும், நம்பிக்கைகளையும் பயன்படத்தக்க முறையில் வாழ்வில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

(வளரும்)

---

# சரித்திர நாவல்கள்

இன்றைய இலக்கியஉலகில் நாவல், சிறுகதைகள் இவைகளின் கிராக்கி அதிகரித்து வருகின்றது. பல தரப்பட்ட கண்ணோட்டங்களின் அடிப்படையில் மக்களின் சலே, கலாச்சாரப் பாரம்பரியங்கள், வாழ்க்கை என்பவற்றைப் பின்னணியாகக் கொண்டு நாவல்களும், சிறுகதைகளும் படைக்கப்படுகின்றன. எனினும் அவை நிகழ்காலநிகழ்ச்சிகளை ஆதாரபூர்வமாகக் கொண்ட சமூகச்சீர்திருத்தக் கதைகளாக அமையப்பெறுகின்றன. அன்றாட வாழ்க்கையின் நெளிவுசுழிவுகளைப் படம் பிடித்துக் காட்டுவனவாகவே பெரும்பாலும் அவை அமைந்துவிடுகின்றன. இஃதிவ்வாறிருக்க-

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த எம் முன்னோர்களின் பழக்கவழக்கங்களையும், அவர்களுக்கேயுரித்தான அக்காலத்துப் பண்பாட்டினையும், வாழ்க்கை முறைகளையும் வைத்து, அந்தக்காலத்து அரசர்களின் வரலாற்றைப் பின்னிப் பிணைந்து படைக்கப்படும் சரித்திரநாவல்கள், கதைகளிற்குப் பலமான வரவேற்பு மக்களிடையே இருப்பதை அவதானிக்கலாம். இந்த வரிசையில் "கல்கி", சாண்டில்யன், ஜெகசிற்பியன், அகிலன், விக்கிரமன், பார்த்தசாரதி, ஸ்ரீவேணுகோபாலன், மோகினி, மணிவண்ணன், கவிஞர் கண்ணதாசன் ஆகியோர் இந்தியசரித்திர நாவல்கள், கதைகள் படைப்பதில் முதலிடம் வகித்திருக்கிறார் [illegible] சரித்திர நாவல்கள், கதைகள் படைப்பதில் முதன்முதலில் ஒரு புதிய உற்சாகத்தை உண்டாக்கியவர் அமரர் "கல்கி" அவர்களே. தமிழ் நாட்டை ஆண்ட பழந்தமிழ் மன்னர்களின் வரலாற்றுச்சான்றுகளையும், மக்களின் வாழ்க்கை நிலைகளையும் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட அவரது சரித்திர நாவல்களில் "சிவகாமியின் சபதம்", "பொன்னியின் செல்வன்", "பார்த்திபன் கனவு" போன்றவை பேரிலக்கியப் பொக்கிஷங்களாக, சிறந்த கதை பகர்டவை. இவர் தவிர, அகிலனின் 'வேங்கையின் மைந்தன்'', "வெற்றித் திருநகர்" என்பனவும், அமரர் ஜெகசிற்பியனின் "யகரய பூ", "கோமகள் கோவலை" என்பனவும், நா. பார்த்தசாரதியின் "மணி பல்லவம்" போன்றனவும் மக்களிடையே பிரசித்தமானவை. வெகுவாக விரும்பிப்படிக்கப்பட்டவை.

இவ்வாறு, சரித்திர நாவல்கள், கதைகள் பிரசித்தமடைந்து வருகின்ற வேளை

## வட்டூர் - ஜெ. கி. ஜெயசீலன்

யோட்டமுள்ளவையாக அமைந்துள்ளன. அவரது காலத்திற்குப்பின் முற்குறிப்பிடப்பட்ட பலரும் அப்பணியைத் திறம்படச் செய்துவருகிறார்களாயினும், குறிப்பிடத்தக்கமுறையிலே, அதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு, சரித்திரநாவலுக்கோர் "சாண்டில்யன்"எனக் கருதும் வகையில் திரு. சாண்டில்யன் திறம்பட எழுதிவருகின்றார். யவனராணி, கடற்புறா, ராஜபேரிகை, ராஜமுத்திரை, ராஜ திலகம், ஜலதீபம், மன்னன் மகள் போன்றவை சாண்டில்யனின் கைவண்ணத்திற்குச் சான்றுயிலே, பெரும்பாலும் இவை இந்திய அரசியல் வரலாற்றை பின்னணியாகக் கொண்டே எழுதப்பட்டு வருகின்றது. இதைவிட, ஈழத்தில் சரித்திர நாவல்கள், கதைகள் மிகக் குறைவாக இல்லை; படைக்கப்படுவதே இல்லை, இந்தியசரித்திர நாவலாசிரியர்களின் ஊக்கம் நம் நாட்டு நாவலாசிரியர்களிடையே இல்லாதது ஒரு பெருங்குறையே. சொந்தநாட்டினது பழங்கால வரலாறுகளை, பண்பாட்டுச் சிறப்புக்களை, கலையம்சங்களை தொடர்ந்துவரும் சந்ததிக்கு

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இலங்கையில் மத்திய வகுப்பின் தோற்றமும்வளர்ச்சியும்

# கிறிஸ்தவ மிசனரிப் பாடசாலைகளின் ஆரம்பமும் மத்திய வகுப்பின் எழுச்சியும்

**தி. வெற்றிவேலுப்பிள்ளை** பி. ஏ. (சிறப்பு)

பிரித்தானியஆட்சிக்காலத்தில் இலங்கையில் தோன்றிய புதிய மத்திய வகுப்பினர் பிரித்தானியரை எதிர்த்துக்கிளர்ச்சி செய்யவில்லை. இலங்கையில் தோன்றிய இம்மத்திய வகுப்பினர் ஆங்கிலக் கல்வியைக் கற்று பிரித்தானிய மத்திய வகுப்பைப் பின்பற்றி அதிகாரத்திற்கு வர முயற்சிசெய்தனர். இலங்கை சட்டசபையில் உத்தியோகப்பற்றற்றஅங்கத்தவர்களின் தொகை அதிகரிக்கப்படவேண்டுமென்று, பின்னர் இம்மத்திய வகுப்பினரே பிரித்தானிய அரசாங்கத்திடம் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தை வேண்டி நின்றனர். இவ்வகுப்பினர் 1931-ம் ஆண்டு டொனமூர் அரசியல் திட்டத்தின் பிரகாரம் ஓர் குறிப்பிடத்தக்களவு அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டார்கள். மிக விரைவாக இலங்கை மத்திய வகுப்பினர் பிரித்தானியர் வகித்த உயர் பதவிகளைத் தங்கள் வசம் ஆக்கிக்கொண்டனர்.

இம்மத்திய வகுப்பு தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும், தனது நலன்களை அபிவிருத்தியடையச் செய்வதற்காகவும் ஒருங்கிணைந்து ஒரு கட்டுக்கோப்புடன் இயங்கி வந்தது. 1931-ல் சர்வஜன வாக்குரிமைவழங்கப்பட்டமை இம்மத்திய வகுப்பின் ஒருங்கிணைப்பையும், கட்டுக்கோப்பையும் மேலும் உறுதிப்படுத்தியது.

இவ்வாறு துரிதமாக வளர்ச்சியடைந்த மத்திய வகுப்பினருக்கிடையே முரண்பாடு ஏற்படத்தொடங்கியது. இதற்கு முக்கிய காரணம் மத்திய வகுப்பில் அங்கம் வகித்த பல்வேறு பகுதியினரையும் பிரித்தானிய அரசாங்கத்தால் திருப்திப்படுத்த முடியாதுபோனமையாகும். உள்நாட்டவர்களுக்குச் சட்டசபையில் போதியளவு இடமளிக்கப்படவில்லை. அத்துடன் அரசாங்க, மற்றும் துறைகளில் மத்திய வகுப்பின் வளர்ச்சிக்கு ஏற்ப உத்தியோகங்கள் வழங்கப்படாது வரையறுக்கப்பட்டன. மத்திய வகுப்பில் அங்கம்வகித்த பல்வேறு சமுதாயத்தினரும் ஒரேமாதிரி அபிவிருத்தியடையவில்லை. சில சமுதாயத்தினர் கல்வியில் பின்தங்கியவர்களாகவும், பொருளாதார முன்னேற்றமடையாதவர்களாகவும் காணப்பட்டனர். இத்தகைய நிலைமை மத்திய வகுப்பில் ஒரு சமத்துவமின்மையை உருவாக்கியது.

கரையோரச் சிங்களவர் வியாபாரத்தின் மூலமும், பெருந்தோட்டங்களினூலும் செல்வத்தை ஈட்டினர். இவ்வாறு செல்வத்தைப் பெற்ற கரையோரச் சிங்களவர் தங்களுடைய பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்காக கிறிஸ்தவ பாதிரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கிலப் பாடசாலைகளை நாடிச் சென்றனர். இப்பாடசாலைகளில் இவர்களின் பிள்ளைகள் கல்விபெற்றதினுல் அரசாங்க உத்தியோகங்களையும், சட்ட, வைத்திய, ஆசிரிய பதவிகளையும் பெற வழி ஏற்பட்டது.

### தமிழ்ப்பிரதேசங்களில் மத்திய வகுப்பின் நிலை

பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் தமிழர்கள் பெருமளவில் வசித்த பிரதேசங்களில் பொருளாதாரத்தில் பெருமளவு மாற்றம் ஏற்படவில்லை. சமூகரீதியில் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டிருந்தது. ஒரு குறிப்பிடத்தக்களவு உயர் சாதியினர் ஆங்கில மிசனரிமாரால் இப்பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியைக் கற்று அரசாங்க சேவையில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றனர். இன்னும் சிலர் வழக்கறிஞர்களாகவும், ஆசிரியர்களாகவும் தொழில் புரிந்தனர்.

கிறிஸ்தவ பாதிரிமார்கள் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட சேவைகளின் பயனுகத் தமிழ்க்கல்வி புனருத்தாரணம் செய்யப்பட்டதோடு, இந்து சமயமும் மறுமலர்ச்சியடைய வழி ஏற்பட்டது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் (முன்னர் இது பற்றிக்கோற்ரா செமினரி) தமிழ் இலக்கண, இலக்கியத்தோடு இந்துசமயதத்துவமும் போதிக்கப்பட்டது. கிறிஸ்தவ பாதிரிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் கிறிஸ்தவ பாடசாலைகளை நிறுவிவந்தமை, இப்பிரதேச மக்களின் ஆங்கில அறிவு விருத்தியடையப் பெரிதும் உதவியதுடன், அவர்களுக்கு அரசாங்க உத்தியோகங்களைப் பெறவும், அதன் மூலம் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறவும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தது.

இவ்வாறு கிறிஸ்தவ பாதிரிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாழ்ப்பாணப் பகுதிகளில் ஆங்கிலக் கல்வி கற்ற மத்திய வகுப்பொன்று உருவாகுவதற்கு வழி அமைத்துக் கொடுப்பவையாக விளங்கியது.

யாழ்ப்பாணக் குடாநாடு வேளாளரின் ஆதிக்கமுடையதாயிருந்தது. இங்கு தேயிலைத் தோட்டங்களோ, கோப்பித் தோட்டங்களோ இல்லாதிருந்தபடியால் பொருளாதார வாழ்வில் அதிக மாற்றமொன்றும் ஏற்படவில்லை. இங்குள்ள கமக்காரர்கள் வியாபாரம் முதலிய வேறு தொழில்களில் ஈடுபடவில்லை. இப்பிரதேசத்தில் புதிய சக்திகள் தோன்றி பழைய சமூகக்கட்டுப்பாட்டை ஊடுருவின. கிறிஸ்தவ பாதிரிமார் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சமூக மாற்றத்தை விரும்பி நின்றனர். கிறிஸ்தவ பாதிரிமாரின் வருகையினுல் யாழ்ப்பாணக்குடாநாட்டில் மேலைத்தேய கல்வி பரவியதால் சமூகத்தில் காணப்பட்ட உயர்வு, தாழ்வு ஓரளவிற்குச் சமமாகத் தொடங்கியது.

19-ம் நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்து ஆங்கில மிசனரிமார் இலங்கையில் விசேடமாக யாழ்ப்பாணத்திலே தமது கல்விப்பணியை ஆரம்பிக்கத் தொடங்கினர். யாழ்ப்பாணத்தில் முதன் முதலில் ஆங்கிலப்பாடசாலையை நிறுவியவர்கள் வெஸ்லியன் மிசனரிமார்களேயாவர்.

கிறிஸ்தவ மிசனரிப் பாடசாலைகளில் படித்த மாணவர்களுக்கு ஆங்கிலமும், தமிழும் கற்பிக்கப்பட்டதோடு, கிறிஸ்தவ சமயம், கணிதம், இலக்கணம், பூமிசாஸ்திரம், கணிதம் போன்ற பாடங்களும் கற்பிற்கப்பட்டன,

யாழ்ப்பாணத்தில் மிசனரிமாரால் நிறுவப்பட்ட கல்வி ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்கு அக்காலத்து பிரித்தானிய அரசாங்கத்தின் மொழிக் கொள்கையும், அரசியற் போக்கும் உதவியாயிருந்தன. 1843-ம் ஆண்டளவில் கல்வித் துறையில் ஏற்பட்ட மாற்றங்களின்போது 'யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆங்கிலப்பாடசாலைகளைப் பாதிரிமார் திறம்பட நடாத்திவந்தபடியால் ஆங்கிலக் கல்வி பயிற்றும் பொறுப்பை அரசாங்கம் அவர்களிடமே விட்டு, அப் பாடசாலைகளுக்கு உதவி நன்கொடை அளித்துவந்தது' என டாக்டர் மெண்டிஸ் கூறுகிறார்.

இவ்வாறு தமிழ்ப் பகுதிகளில் அரசாங்கத்தின் உதவியோடு மிசனரிமார் நடாத்திய ஆங்கிலப்பாடசாலைகளிலிருந்து ஆங்கிலக் கல்விகற்ற மத்திய வகுப்புத் தமிழர்கள் உருவாகத் தொடங்கினர். இவர்களுட் பலர் கிறிஸ்தவ சமயத்தையும், மேலைத்தேய வாழ்க்கை முறைகளையும் பின்பற்றிவந்தனர்.

வட்டுக்கோட்டை செமினரியிற் கொடுக்கப்பட்ட கல்வி மிகச்சிறந்த முறையில் அமைந்திருந்தது. இங்கு ஆங்கிலம் போதனுமொழியாக இருந்த போதிலும் தமிழ்மொழி சிறப்பாகக் கற்பிக்கப்பட்டது. இங்கு மேல்நாட்டுக் கல்வி முறைகளோடு இந்திய முறைகளும் கற்பிக்கப்பட்டன. இப் பாடசாலையிலிருந்து கல்வி கற்று வெளியேறியவர்கள் அரசாங்க சேவையில் உயர் பதவிகளில் அமர்ந்தனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

சாவகச்சேரி

# இந்துக் கல்லூரியும் அதன் ஸ்தாபகரும்

**திருமதி சு. சிவநாராயணமூர்த்தி**

இன்று சாவகச்சேரி இந்துக்கல்லூரி தென்மராட்சியின் மணிமகுடமாகத்திகழ்ந்து தன் கல்விப் பிரதேசத்தை இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் தெறிக்கும்படி வீசிக் கொண்டிருக்கிறதென்றுல் இப் பகுதி பெரியார்களுள் முதலிடம் வகிக்கும் எமது கல்லூரியின் ஸ்தாபகரான அமரர் வி. தாமோதரம்பிள்ளை அவர்களால்தான். காரணம் அவர் எழுபத்தைந்து வருடங்களுக்கு முன்பு தென்மராட்சியிலுள்ள சங்கத்தானைபகுதியில் இக் கல்லூரிக்கு வித்திட்டு இதனை ஆரம்பித்து வைத்திருக்காவிட்டால், இன்று நாம் அனைவரும் சைவ சமயத்தவர்களாக இருப்பது அசாத்தியமாகும். இலங்கையில் ஆங்கிலேயரின் ஆட்சி சுடர்விட்டெரிந்த காலத்தில், யாழப்பாணத்து நல்லூர் நாவலர் தோன்றிலரேல், நம் நாட்டில் சைவம் எங்கே? தமிழ் மொழியின் வளர்ச்சி எங்கே? அதேபோல் தென்மராட்சியில் 1864ஆம் ஆண்டு எமது கல்லூரி ஸ்தாபகர் தோன்றிலரேல் இப்பகுதியில் சைவமும் தமிழும் மந்த நிலையைக் கண்டு மறைந்து இருக்கும்.

எமது கல்லூரியின் ஸ்தாபகரான அமரர் வி. தாமோதரம்பிள்ளை நாவலர் அவர்கள் செய்த அரும்பெரும் தொண்டினுல் கவரப்பட்டு, நாவலரால் உருவாக்கப்பட்ட சைவ சமய விழிப்புணர்ச்சியிற் குதித்து, தென்மராட்சியில் இந்துமதத்தைப் பாதுகாத்தார். அவரின் புகழுடம்பாக என்றும் திகழ்வது சாவகச்சேரி இந்துக்கல்லூரியும், சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலயமும், சாவகச்சேரி சங்கத்தானை, பரந்தன் பகுதிகளில் பொது நன்மைக்கென அவரால் தோண்டப்பட்ட இருபதுக்கு மேற்பட்ட கேணிகளும், கிணறுகளும் ஆகும். சைவசமயம் எச் செயல்களை புண்ணிய கைங்கரியங்கள் என வகுக்கின்றதோ' அவற்றை அனைத்தையும் செய்து சிவ புண்ணியச் சீலராக விளங்கியவர் இப்பெரியார் ஆவர். அமரர் தாமோதரம்பிள்ளை தமது நீண்டகால வாழ்வை சமூக நலனுக்காகவும் அர்ப்பணித்தார். சமூகத் தொண்டுசெய்ய வேண்டுமென்பதைத் தன் குறிக்கோளாகக் கொண்டு, நாவலர் பெருமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, வித்தியா தர்மத்தையும், சிவாலய கைங்கரியத்தையும் மேற்கொண்டார்.

அமெரிக்கன் மிஷனரிமார் எமது கல்லூரியின் ஸ்தாபகரின் ஊரான சங்கத்தானைக்கு அண்மையிலுள்ள சாவகச்சேரி பட்டினத்தில் 'டிறிபேர்க் கல்லூரி'யை உருவாக்கி ஆங்கிலக் கல்வியைப் போதிக்கத் தொடங்கினர். அக்காலத்தில் ஆங்கிலம் உத்தியோகமொழியாக இருந்தமையால் பல சைவப்பெற்றுர் ஆங்கிலக் கல்வி பெறுவதற்காகத் தமது பிள்ளைகளை இக்கல்லூரிக்கு அனுப்பினர். இப்பிள்ளைகள் கிறிஸ்தவர்களாக மாறி கல்வி பயின்றனர். இதைக்கண்டு மனம்பொறுத எமது கல்லூரி ஸ்தாபகர் தமது ஊரான சங்கத்தானையில் தற்போது சாவகச்சேரி இந்துக்கல்லூரி தோன்றும் இடத்திற்குத் தென்மேற்கில் உள்ள கந்தசுவாமி ஆலய வெளிவீதியில் ஒரு சைவத் தமிழ்க்கலாசாலையை நிறுவி சைவசமய அடிப்படையில் சிறுவர் சிறுமியருக்குக் கல்வி ஊட்ட முற்பட்டார். இது [illegible] சாலையாக [illegible]

இக்கல்லூரி நடத்துவதற்கு அரசாங்க நிதி உதவியையும் இவர் பெறக்கூடியதாயிருந்தது. இக்கலாசாலையில் பத்தாம் வகுப்புவரையும் மாணவர்கள் பயின்றனர்.

ஆங்கிலக் கல்வியின்முக்கியத்துவத்தை உணர்ந்த அவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி இப்போது இருக்கும் வளவில் ஓர் ஆங்கிலக் கலாசாலையை நிறுவி மாணவர்கள் சைவ சமய அடிப்படையில் ஆங்கிலக் கல்வி பெறக்கூடிய ஓர் சூழ்நிலையை ஏற்படுத்தினுர். சிலவருடங்களின்பின்புகோயில் வீதியில் நடாத்தப்பட்டு வந்த தமிழ்க் கலாசாலையை ஆங்கிலக்கலாசாலை இருக்கும் வளவிற்கு மாற்றினுர். இரு கலாசாலைகளும் தனிப்பட்ட கலாசாலைகளாக ஒரே வளவில் இயங்கத்தொடங்கின. இவ் ஆங்கிலக் கலாசாலைக்கு எமது ஸ்தாபகர் அரசாங்க உதவியைப் பெறமுயன்றபோது மிஷனரிமார்அவரின் முயற்சிக்குத் தடைவிதித்தனர். இக் கலாசாலைக்கு மிகவும் அண்மையில் டிறிபேக் கல்லூரி இருப்பதால் இப்புதிய ஆங்கிலக் கலாசாலை அவசியமில்லை என அரசாங்கத்திற்கும் சுட்டிக்காட்டினர். ஆகவே அரசாங்கம் இவரால் நிறுவப்பட்ட புதிய ஆங்கிலக் கலாசாலைக்கு பணஉதவி கொடுக்க மறுத்தது. இக்கல்லூரியைத் [illegible] நடத்த வேண்டு[illegible] [illegible]பெரியார் மனம் தளரவில்லை. தனது பெயரில் உள்ள காணிகள். கிட்டங்கிகள் ஆகியவற்றை விற்று ஆசிரியர்களுக்கு வேதனம்கொடுத்து இவ் ஆங்கிலக்கலாசாலையை நடாத்தினர்.


அரசாங்கத்தின் உதவியைப் பெறவேண்டுமென்ற எண்ணத்துடன் அக்காலத்தில் சட்டசபை உறுப்பினராக இருந்தவரும், வித்தியா தர்மத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவருமான சேர் பொன்னம்பலம் இராமநாதனுடன் இவர் தொடர்பு கொண்டார், சேர் பொன். இராமநாதனின் உதவிமூலம் இவரால் நடாத்தப்பட்டுவந்த ஆங்கிலக் கலாசாலைக்கு அரச உதவி கிட்டியது.

கல்லூரியின் எதிர்காலத்தை மனதில்கொண்ட எமது ஸ்தாபகர் தமது கல்லூரியையும் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த பரிபாலன சபையிடம் ஒப்படைத்தார். இதற்குப் பின்புதான் இவரால் நிறுவப்பட்ட ஆங்கிலக் கலாசாலை சாவகச்சேரி இந்துக் கல்லூரி எனத் தரம் உயர்ந்து திகழ்ந்தது. இச் சபையிடம் தமது கல்லூரியை ஒப்படைத்தாலும் தான் உயிரோடு உள்ளவரைக்கும் இக்கல்லூரியின் முகாமையாளராகப் பணிபுரிந்து தன்னுல் நிறுவப்பட்ட இரு கலாசாலைகளின் வளர்ச்சியிலும் கவனம்செலுத்தினுர். இவரின் சமயத் தொண்டை நன்குணர்ந்த பரிபாலன சபை இவரை சபையினேர் சீவிய கால அங்கத்தவனுக நியமித்து இவ்விரு கல்லூரிகளின் ஸ்தல முகாமையாளராக இவரை நியமித்தது.

பரிபாலன சபையிடம் ஒப்படைக்கப்பட்ட கல்லூரி வெகுவிரைவில் வளர்ச்சியடையத் தொடங்கியது. விஞ்ஞான பாடம் போதனையும் இங்கே புகுத்தப்பட்டு மாணவர்கள் கலைத்துறையில் மட்டுமல்ல, விஞ்ஞானத்துறையிலும் அறிவைப்பெற்று சமயம், தமிழ், ஆங்கிலம் ஆகிய துறைகளிலும் பரந்த அறிவைப் பெறக்கூடியதாயிருந்தது. 1945-ம் ஆண்டு அவர் அமரரானகாலம் வரையும் இக்கல்லூரியை பராமரித்து வந்தார். 1946-ம் ஆண்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் தரம் 'A' தரத்திற்கு உயர்த்தப்பட்டு சர்வ கலாசாலைப் புகுமுக வகுப்புகளை நடாத்தும் உரிமையையும் பெற்றது. 1960-ம் ஆண்டு அரசாங்கம் பொறுப்பேற்ற காலத்தில்இருந்து இக்கல்லூரி அரசாங்க உதவியுடன் துரிதமான முன்னேற்றத்தைக் கண்டது.

இப்பெரியாரின் அடிச்சுவட்டை நாமும் பின்பற்றி அவரால் ஆரம்பிக்கப்பட்ட கைங்கரியங்களுக்குக் கை கொடுத்து அவரது உயர்ந்த குணங்களைப் பின்பற்றி, சமூகத்தொண்டில் ஈடுபட்டு எமது புகழுடம்பை நிலைக்கச் செய்வோமாக.

## குடை வெடி!



வி. சந்திரகுமார்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரங்கும் அவையும்

## தேன் மாரி பொழிந்த கலாநிதி பாலமுரளி

இளம் கலைஞர் மன்றம், அண்மையில் யாழ். திறந்த வெளியரங்கில் நடாத்திய கலாநிதி பாலமுரளி கிருஷ்ணா வின் இசைக்கச்சேரி, தேன் மாரி பொழிந்தது போல் இரசிக பெருமக்களைப் பெரும் இன்பத்தில் ஆழ்த்தியது. மூன்று ஸ்தாயிகளிலும் சஞ்சாரம் செய்யக்கூடிய நல்ல சாரீர வசதி இருப்பதனால் ராகபாவம் ததும்பப் பாடிய போதெல்லாம் ஜீவஸ்வரங்களைத் தொட்டுக் காட்டிய வாறே நவரசங்களையும் சேர்த்துத் தேன்மாரி பொழிந்தார். இராகம் - தானம் - பல்லவி அமைத்து 'நவமுகி' என்ற தாளத்தில் அமைந்த தன் சொந்த சாகித்திய பல்லவியைப் பாடிப் பக்கவாத்தியக் காரரையும் இரசிகர்களையும் தம்முடன் ஒன்றிணையச்செய்து கச்சேரியின் பிற்பகுதியை நன்கு களை கட்டச் செய்தார். சப்த தாளங்கள் ஐந்து ஜாதி பேதத்தினால் முப்பத்தைந்து தாளங்களாகியதையும் லகு, துருதம் முதலிய அங்கங்களின் மாற்றங்களையும் விபரித்து சபையோர் விளங்கி ரசிக்கக் கூடிய முறையில் மக்களைத் தன்வசப்படுத்தியமை, உருப்படி வகைகளைத் தெளிவாகவும் ராகத்தின் உயிர்நாடி ஒலிக்கும் வகையிலும் பாடியமை, மோகனராக ஆலாபனையில் சாரீரம் ராகக்களையுடன் முத்து முத்தாக உருண்டு கொண்டிருந்தமை எல்லாம் நாம் கண்டு நுகர்ந்த சிறப்பம்சங்கள். ஆரம்பம் முதல் இறுதி வரை சோராத வகையில். மனக்குளிர்ச்சியுடன் மேடையில் இருந்து எல்லோருக்கும் உற்சாகமூட்டி மனம் கோணாது கச்சேரி செய்தமையை எப்படித்தான் மறக்க முடியும். ஆயிரம் கொடுத்தாலும் தகும். ரசிகர் ஒருவர் தனக்கு ஐந்நூறு ரூபா நட்டமென்றார், ஏன்? என்றனர் அருகிலிருந்தோர். பேச்சுக்கச்சேரி, அரை மணி நேரத்தை விழுங்கியதால், ஐந்து பாடல்களைக் கேட்க முடியவில்லையே. அதுதான் ஐந்நூறு நட்டம் என நக்கலடித்தார். பேச்சுக்கள் தவிர்க்கமுடியாததெனினும், இசை நாடக விழாக்களில இயல் அவசியம் தானா? அதுவும் நீண்ட நேரம்.

## அகில இலங்கைப் போட்டிக்கு யாழ். நாடகம்

கலாச்சாரப் பேரவை பிராந்திய மட்டத்தில் போட்டியமைத்து, தேர்ந்தெடுத்த நாடகங்கள் கொழும்பில் வெகுவிரைவில் மேடையேற உள்ளன. நாடகக்கலைஞர் அ. தாசீயஸ் எழுதி, நெறியாள்கை செய்த நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பான 'பொறுத்தது போதும்' என்ற ஆடல் பாடல் விரவிய நவீன ஆக்கம் இப்போட்டிக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து செல்கிறது. தரமான நடிகர்களாகிய அ. பிரான்சிஸ், ஏ. ரி. பொன்னுத்துரை, க. நவரத்தினம், எஸ். தேவராசா, ஜி. பி. பேர்மினஸ், செ. சுந்தரலிங்கம், செல்வ-பத்மநாதன், எஸ். கே. குமார், பி. எம். கனகரத்தினம், கே. தயாளன், கே. வி. இராஜதுரை பங்கு கொள்ளும் இந்நாடகத்தின் பின்னணியில் எம. சண்முகலிங்கம் (குழந்தை) எஸ். ரி. அரசு, எம். கண்ணன், வி. எம். குகராஜா, சி. க. நாகேந்திரா உட்பட பல இளைஞர்கள் காத்திரமான பணியை அடக்கப் பண்புடன் புரிகிறார்கள்.

## மிருதங்க அரங்கேற்றத்தில் அறிஞர்கள் ஆசியுரை

கடந்த 21-1-80ல் யாழ் மாநகர மண்டபத்தில் வட்டுக் கோட்டைப் பிரதிநிதி திரு. தா, திருநாவுக்கரசு தலைமையில் மாவிட்டபுரம் முதுபெரும் நாதஸ்வர வித்துவான் என். எஸ். உருத்திராபதி அவர்களது பேரன் செல்வன் தர்மராஜாவின் மிருதங்க அரங்கேற்றம் கலைஞர்கள் மத்தியில் சிறப்பாக நடைபெற்றது. மாவை ஆதீன கர்த்தா மகாராஜ ஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள் ஆசியுடன் கூடிய விழாவில் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். நாதஸ்வர மன்னன், என். கே. பத்மநாதன் நாதஸ்வரம் வாசிக்க, இசை ஞான திலகம் ஆர். இராதா கிருஷ்ணன் வயலின் இசைக்க, லயஞான கலாநிதி என். குமரகுரு தவில் வாசிக்க, தவில் இளவரசு ஆர். புண்ணியமூர்த்தி கெஞ்சிரா அடிக்க, இவர்களுடன் சமதையாக மிருதங்கம் வாசித்து தனது தகைமையை அரங்கேற்றத்திலேயே நன்கு காட்டியுள்ளார் செல்வன் தர்மராஜா'' என உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் வாழ்த்தினர்.

### கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை



'பத்மநாதன், இராதாகிருஷ்ணன் போன்ற பெரும் கலைஞர்கள் பல நுட்பங்களை அமைத்து வாசித்தபோதும் கூட, நாம் செல்லமாக, இராமநாதன் நுண்கலைப் பிரிவில், கண்ணன் என அழைக்கும் தர்மராஜா விட்டுக் கொடுக்காமல் நுட்பமாக மிருதங்கத்தைக் கையாண்டமை திருப்தி தருகிறது' என புகழாரம் சூட்டினார் திருமதி சரஸ்வதி பாக்கியராஜா. 'இராமநாதன் அவரது சிஷ்யன் சின்னராசா அவரது சிஷ்யன் தர்மராஜா என ஒரு நல்ல பாரம்பரியத்தை மிருதங்கத்துறையில் வளர்வதைக்காண உள்ளம் குளிருகிறது, எனத் திரு. சண்முகசுந்தரம் குறிப்பிட்டார். 'தாயார் ஓர் இசை ஆசிரியை, சிறியதாயார் ஓர் இசை ஆசிரியை. பாட்டன் தங்கநாதஸ்வரப் பரிசுபெற்ற பெருநாதஸ்வர வித்துவான், இத்தகைய சூழலில் பிறந்த கண்ணன் கலையுலகில் காத்திரமான சாதனையைச் செய்யப்போகின்றான்' என கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை இசைப்பகுதி ஆசிரியர் பொன். தெய்வேந்திரன் கூறினார். பொன். சுந்தரலிங்கம், ஏ. தியாகராஜா உட்படப் பலர் வாழ்த்தினர். அன்றைய அரங்கத்தில் சங்கமித்தோர் எல்லாம் பல்வேறு துறைகளில் சுடர்விடும் கலைப் பெருமக்களே!

## சொக்கனின் பரந்த உள்ளம்

நாடக அரங்கக் கல்லூரியின் இரண்டாவது கட்டக் களப்பயிற்சி வகுப்புக்களை நடாத்த இடமில்லையே என்ற ஏக்கத்தைத் துடைக்கும் வகையில் எழுத்தாளர் சொக்கன்தான் அதிபராகக் கடமையாற்றும் கோண்டாவில் இராமகிருஷ்ணன் பாடசாலையை, கல்விப் பகுதியின் உத்தரவைப் பெற்று உவந்தளித்தமை கலையுலகில் ஒரு நற்செய்கையே. ஒவ்வொரு ஞாயிறும் காலை ஒன்பது மணிமுதல் பன்னிரண்டு மணி வரை தாசீசியஸ், சண்முகலிங்கம் வழிநடாத்த நிகழும் இக்களப்பயிற்சி வகுப்புகளில் இருபத்தைந்துக்கு மேல் இளைஞர்கள் பயிற்சிகள் பெறுகின்றனர், இலவசமாக நடைபெறும் இப்பயிற்சிகள் நாடக நுணுக்கங்களை முறையாகப் பயில விரும்புவோர்க்கு நல் வரப்பிரசாதமே. தான் தோன்றித்தனமாகப் பயிற்சி எதுவுமேயின்றி மேடை ஏறத் துடிக்கும் இளைஞர்கள் இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாது புதுமெருகு பெற்றால் என்ன?

## வழிக்குத்துணை மெய்ப்பொருள்

தலைசிறந்த சமயச் சொற்பொழிவாளர் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு இரண்டு, மாவை ஆதீன அரங்கில் அண்மையில் இடம்பெற்றன. கணீரென்ற குரலும் இசைக்கும் ஆற்றலும், ஆழ்ந்த இலக்கிய சமய அறிவும் ஒன்றிணைந்த இவரது பேச்சு புன்மொழியின்றி புனிதம் இழையோடும் தனித்துவம் பெற்றிருந்தது. உலக வாழ்விலேயே தூர வழிபோகத் துணையோடு செல்லென ஔவையார் கூறுகிறார். நீண்டபயணமாகிய ஆத்மீக வாழ்வில் எமது இலக்கை அடைய உறவினரோ, செல்வமோ மற்றும் உலகப் பொருட்களோ உதவப்போவதில்லை. அவை எல்லாம் மெய்ப்பொருட்கள் அல்ல. திருவருளே மெய்ப்பொருள் அதுவே எமது இலட்சியப் பயணத்துக்கு உதவுவது என்ற வைராக்கியத்துடன் நாம் தொழிற்பட வேண்டுமென அம்மையார் புராண இதிகாச ஆதாரங் காட்டிஇசையையும் குழைத்து பக்திததும்பப் பேசினார்.

துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டியின் பாதையில் பீடுநடைபிடிக்கூடியவர் வித்துவான் திருமதி வசந்தாவைத்தியநாதன் அவர்கள் என்ற [illegible] தனித்துவம் மிளிர்கிறது.

# இலக்கிய உலகில் இளையதலைமுறை - (25)

# புரட்சிக் கவிஞன் புதுவை இரத்தினதுரை

### காவலூர் எஸ். ஜெகநாதன்

முன்பெல்லாம் புதுவை இரத்தினதுரை அடிக்கடி எனக்குக் கடிதம் எழுதுவார். நானும் எழுதுவேன். பரஸ்



பரம் எனது கவிதைகளை அவரும் அவரது சிறுகதைகளை நானும் பாராட்டிக்கொள்வோம். 78-ம் ஆண்டளவில் 'ஈழநாடு' வாரமலரில் அடுத்தடுத்து அவரது கவிதைகள் வெளிவந்தவேளை-அது. அந்தக் கவிஞனைச் சந்தித்து அவர் உள்ளத்தோடு உறவாட வேண்டும் என்று கொள்ளை ஆசை எனக்கு. நிறைவேற்ற அவர் கடிதம் வந்தது. கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க விழாவில் கவிதை பாட வருகிறேன். கவிதையில் பரிசும் உண்டு. சிறுகதையில் உனக்குத்தானே தங்கப்பதக்கம். வருவாய் சந்திப்போம். பரிசு பெறுவதைவிட இரத்தின துரையைக் காணப்போவது தான் எனக்கு மகிழ்ச்சி.

இவர்தான் புதுவை என்று என்னை இழுத்துச் சென்ற நண்பர் அருகேயமர்த்திவிடுகிறார். பக்கத்தில்இரத்தினதுரை. 'வா மச்சான் நாம் போவம்' என்னை இழுத்துக்கொண்டு மண்டப முகப்புக்கு வருகிறார். சிவபூசையில் கரடியாக இடையில் நுழைந்த ஒருவர் முறுகிக் கொண்டே 'நீங்களெல்லாம் நேற்றுப் பெய்த மழைக்கு முளைச்ச காளான்கள். நாங்கள்...' என்று தொழிற்பழக்கமாக சுயபுராணம் பாடுகிறார். எனக்கும் கவிஞனுக்கும் கவலை. 'மாலையில் முழுவதும் உன்னோடைதான் மச்சான் மனம் விட்டுப் பேசவேணும்' என்கிறார்!

ஆவலோடு மாலையை எதிர் பார்த்திருந்தேன். ஏமாற்றமே. நண்பர்கள் யாரோ அவரை அழைத்துச் சென்றுவிட்டார்கள். என்னைக் கண்டதும் முடியாத கவலை அவருக்கு. 'மச்சான் இப்ப நிலைமை சரியில்லை. நீ எப்ப ஊருக்குப் போறாய்' மறுநாள் யாழ்தேவியில் நான் போகவேண்டியதைக் கூறினேன். தானும் வருவதாகக் கூறினார். மறுநாள் கூறியபடி பயணப்பட முடியாமல் போய்விட்டது. பின்னர் சந்திக்கலாம்தானே என்றிருக்க...

அன்று மாத்தளை செல்வாவின் கடிதம் வந்தது. புதுவை இரத்தினதுரை சிங்கப்பூர் போய்விட்டதாக...என் வாழ்வில் பலதடவை நினைத்துள்ளத்தால் உச்ச வேதனையடைந்த சம்பவம் இது.

புதுவை- இரத்தின துரை ஒரு அற்புதமான கவிஞன். வெறும் வசனங்களை எழுதிவிட்டு கவிதை என்று கூத்தாடும் காலம் இது. ஆனால் புதுவையின் கவிதைதான் கவிதை, எம்மவர்களிடம் ஒரு சாபக்கேடு. செத்தபின்தான் பாராட்டு விழா எல்லாம். ஆற்றல் மிக்க இலக்கியம் படைத்தவர்கள் எல்லாம் கம் இலக்கியம் பற்றி மக்கள் பேசவேண்டும் என்றால் சாகத்தான் வேண்டுமோ? நம் இனத்தின் சாபக்கேடு அது. நிச்சயமாக நாளை பாரதியை, பஹா கவியை கவித்துறையில் எந்த ஸ்தானத்தில் போற்றுகின்றோமோ அந்த நிலை வரும், புதுவையைப் போற்றுவார்கள். இது வெறும் புகழுரையல்ல. உண்மை.

மரபுக்கு மாறாக நாம் இப்போதே பாராட்டுவது ஆற்றல் மிக்க கவிஞன் அள்ளித்தந்தது போதாது என்பதால்...காலம் அவர் முன்னால் நீளவும் உள்ளது. கவிதைச்சுரங்கம் அவர். சோதனைகள் எந்தக் கவிக்கு இல்லை. பேனாவை மூடி ஓடிவிடாது மீண்டும் வரவேண்டும். கவிமழை பொழியவேண்டும் என்ற இதயபூர்வமான ஆசையால்தான்.

பாடுகிறார் பாருங்கள்...

'சந்திரா அவளின் மார்புச் சதை வெளியே தெரியும் போது சிந்திடும் அழகுதன்னை பாடும் கவிஞரல்லவாம் தான். 'மின்சுழல் விசிறி காற்று வீசிட மெத்தைமீது கண்வளர்கின்ற மாடிக்காரரின்' வாழ்க்கையைத் தனது கவிதை பாடாதாம். புதுவையின் கவிதை எதைப் பாடும் என்று கேட்கிறீர்களா? 'சஞ்சிக்காய் உழைக்கும் மாந்தர் சஞ்சலம் துடைக்கப் பாவில் சரித்திரம் எழுதும் தீரர்' என்கின்றார். காதலையும் சணிகையையும் பாடும் கவிஞரல்ல அவர். உழைக்கும் வர்க்கத்துக்காகவே கவி பாடுபவர். சொல்வதிலு எத்துணை கம்பீரம்.

சென்னையில் நடந்த உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாட்டில் புதுவையும் கவிதை பாடினார். ஈழத்தில் இருந்து இப்படியொரு கவிஞரா? அதுவும் இத்தனை இளம் வயதில் என்று வியந்தார்களாம் தமிழகத்தினர்.

டலர் என்னிடம் நேரில்கூற நான் மகிழ்ந்திருக்கிறேன்.

தமிழ்க்கவிதைசெழிப்பதற்கு ஆங்காங்கே கவியரங்குகள் நடப்பது நல்லது. முன்பெல்லாம் இலக்கிய விழாக்களில் கவியரங்கு முக்கிய இடத்தை வகித்தது. மெல்ல கவியரங்குகளும் குறைந்து கவியரங்கு நடந்தாலும் அதற்கு வரும் கவிஞர்களும் குறைந்துபோய் விட்டது. சிலவேளை துணுக்கு கவிஞர்களேபெருகிவிட்டதால் போலும். ஒரு சில வருடங்களுக்கு முன் நடக்கும் கவியரங்குகளிலெல்லாம் புதுவையின் முழக்கம் கேட்டதுண்டு, அவர் பாடுகின்றார் என்றாலே அதற்கென்றொரு கூட்டம் வருவதுண்டு.

புங்குடுதீவில் இருந்து மெய்யுள், நல்லசிவம் என்றுதளைய சிங்கத்தின் குரல் ஒலித்த காலம். புங்குடுதீவிலேயே கவியரங்கு தலைமையுரையில் புதுவை பாடுகிறார்.

[7ம் பக்கம் பார்க்க]

## கிறிஸ்தவ......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு கல்விகற்ற மத்திய வகுப்பினர் அரசாங்க உத்தியோகத்தை விரும்பினரே ஒழிய கிறிஸ்தவமத சேவையில் ஈடுபட விரும்பவில்லை.

யாழ்ப்பாணப் பகுதியில் அரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவ மிசனரிப் பாடசாலைகள் ஆங்கிலக் கல்வியை விருத்திசெய்து அதன் மூலம் ஆங்கிலக் கல்வி கற்ற இலங்கையர் என்ற மத்திய வகுப்பை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உருவாக்கினர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அறிவியல் கட்டுரை:

# விசித்திரமான ஞாபகசக்தி

உங்கள் நாக்கு நுனிவரை வந்து நிற்கும் விடயம் நீங்கள் சொல்வதற்கு முன்னே மறந்துபோய்விட்டதா? ஏதோ ஒரு பொருளை எடுப்பதற்காக அறையினுள்ளே சென்றுவிட்டு எதை எடுப்பதற்காக வந்தோம் என்பதை மறந்துபோய்த் திரும்பி வருகிறீர்களா? உங்களுக்கு மிக நன்றாகத் தெரிந்த ஒருவரின் பெயர் திடீரென்று மறந்துபோய்விடுகிறதா? குறிப்பிட்ட அந்தப் பொருளை எங்கே வைத்தோம் என்று தெரியாமல் நாட்கணக்காய் மண்டையைப் போட்டுப் பிய்த்துக்கொள்கிறீர்களா? கவலைப்படாதீர்கள். மறந்துபோவதும் மறந்துபோவதையிட்டுக் கவலைப்படுவதும் மிக இயல்பானதுதான். எல்லா மனிதருக்கும் பொதுவானதுதான்.

## பெரிய விந்தை

உண்மையிலேயே உங்கள் மூளை மிக அபாரமான ஞாபக சக்தி உடையது. கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள கம்பியூட்டர்களால் சேகரித்துச் சேமித்து வைக்கக்கூடியதைவிட மிக அதிகமான தகவல்களை உங்கள் மூளை சில கன அங்குலங்களில் சேகரித்து வைத்திருக்கிறது. பத்தின் பதினொரும் அடுக்குகளிலுள்ள தகவல்களைச் சேகரித்து வைக்க மனித மூளையினால் முடியுமென்று ஓர் ஆராய்ச்சியாளர் கூறுகிறார். இதுவரை எந்த மனிதனும் அதனால் செய்யக்கூடிய வேலை முழுவதையும் செய்வித்துப் பயனடையவில்லை. ஆகவே நாங்கள் அடிக்கடி மறந்து போகிறோம் என்பது விந்தையல்ல எப்படி இவ்வளவு விடயங்களை நினைவு வைத்திருக்கிறோம் என்பதே பெரிய விந்தையாகும்.

குறுகிய கால நினைவு-நீண்ட கால நினைவு என நினைவுகள் இருவகைப்படுகின்றன. ஒரு தொலைபேசி எண்ணைப் பார்த்தால் தொலைபேசி அழைப்பு முடியும்வரை மட்டுமே அந்த எண் நமக்கு நினைவிருக்கும். இந்தக் கட்டுரையை வாசிக்கும் போது ஒவ்வொரு எழுத்துக்களையும் குறுகிய கால நினைவில் கொண்டே சொற்களை வாசிக்கிறீர்கள். பின் சொற்களைக் குறுகிய கால நினைவில் கொண்டு வசனம் முடியும்போது வசனத்தின் கருத்துக்களைப் புரிந்துகொள்கிறீர்கள். பிறகு அந்த வசனத்தின் எழுத்துக்களோ நினைவில் நிற்பதில்லை. இத்தகைய நினைவுகளே குறுகிய கால நினைவுகள் எனப்படும்.

குறுகிய கால நினைவுகள் ஒன்றுக்குப் பல முறை மீட்கப்படும் போது அவை நீண்ட கால நினைவுகளாக மாறிச் சேமிக்கப்படுகின்றன. (உ+ம்: முன் வீட்டு நண்பரின் பெயர்.) இவ்வாறு நிரந்தச் சேமிப்புக்கு அனுப்பப்பட்ட செய்திகள் சில வேளைகளில் மேற்பரப்பிற்கு வரக் கஷ்டப்பட்டாலும் எப்போதும் அழியாமல் அடி அரங்கில் காணப்படும்.

உங்களுக்கு மிக நன்றாகத் தெரிந்த ஒரு மொழி ஒரு பத்து வருடங்களுக்குப் பாவிக்கப்படாமல் இருந்துவிட்டால் எல்லாத் தகவல்களும் அறிவுகளும் இழக்கப்பட்டதுபோல் தோன்றும். ஆனால் அந்த மொழி பேசப்படுகின்ற சூழலில் ஒரு சில வாரங்கள் கழித்தோமாயின் மீண்டும் அது மிகவும் நன்றாகவும் சகஜமாகவும் எம் வாயில் நுழைந்துவிடும். ஆம்...அது நீண்டகால நினைவுகளில் சேமிக்கப்பட்ட விடயமல்லவா?

எமது மூளை சேமித்துவைத்திருக்கின்ற பெரும்பாலான

**கோகிலா மகேந்திரன்**

தகவல்களைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை என்பது உண்மைதான். ஆனால் விசேடமான சூழ்நிலைகளில் அவற்றை மேற்பரப்புக்குக் கொண்டுவர முடியும். 'ஹிப்னசிஸ்' சில வேளைகளில் சில நினைவுகளை மீளவைக்கிறது. மிகக் குறைந்த மின்னழுத்தம் கொண்ட மின்வாய்களினால் மூளையின் சில பாகங்களைத் தொடும்போது அவை தூண்டப்பட்டு நீண்டகாலமாக மறக்கப்பட்ட பல நினைவுகள் மீட்கப்படுவதை விஞ்ஞானிகள் அவதானித்திருக்கிறார்கள். ஒவ்வொரு விடயமும் ஒரு தனி இடத்தில் மாத்திரமின்றிப் பல இடங்களிலும் சேமித்து வைக்கப்பட்டிருப்பதுபோல் தோன்றுகிறது. சில வேளைகளில் ஒரு மூளையவரைக் கோளத்தின் அரைவாசி வெட்டி அகற்றப்பட்ட பின்னரும் கூட நினைவாற்றல் பாதிக்கப்படாமலிருந்தது. ஆனால் மூளையில் ஒரு பலமான அடி அல்லது ஒரு வலிமையான மின்னதிர்ச்சி நினைவுகள் பலவற்றை அழித்துவிடுகிறது. பின்னர் பழைய நினைவுகள் படிப்படியாக மீளும்போது முதலில் கற்கப்பட்ட நினைவுகளே முதலில் மீளுகின்றன. மூளை பாதிப்புக்குட்பட்டுப் பேசும் ஆற்றலை இழந்துவிட்ட குழந்தை மீண்டும் பேச முயலும்போது 'அ' விலிருந்து 'அம்மா' என்றே தொடங்குகிறது மறுபடியும்.

## நினைவு தடுமாற்றம்

நினைவுகளை மீளக் கொண்டு வருவதில் தொடர்புகளும் சூழ்நிலை சம்பந்தப்பட்ட நிகழ்வுகளும் முக்கிய இடம் வகிக்கின்றன. யாழ்ப்பாணம் பஸ் தரிப்பில் உங்களுக்குப் பின்னால் நின்று உங்களைப் பார்த்துச் சிரிக்கின்ற அந்த மனிதரை உங்களுக்கு ஞாபகம் வரவில்லையா? தவறு உங்களிடம் அல்ல. அவரை வழக்கமாகக் காணுகிற 'நியூ மார்க்கற்' கடையில் கண்டிருந்தால் அந்தக் கடைக்காரரை நீங்கள் அடையாளம் கண்டிருப்பீர்கள். இடம் மாறியவுடன் நினைவு தடுமாறுகிறது இயற்கையே.

குறுகிய கால நினைவுகள் மின்னியல்பு உடையவை என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. RNA நினைவாற்றலுடன் சம்பந்தப்படுவதாகச் சிலர் கருதுகிறார்கள். மூளையில் உள்ள கோடிக் கணக்கான நரம்புக் கலங்களில் காணப்படும் RNA, என்ன புரதத்தை என்ன அளவில் தயாரிக்க வேண்டும் என்று நிர்ணயிப்பதாகவும், இதன் மூலம் கலங்களில் ஏற்படும் இரசாயன மாற்றங்களே சிறு ஞாபகத் துண்டுகளாகச் சேமிக்கப்படுவதாகவும் இவர்கள் நம்புகிறார்கள். மூளைப் புரதங்களின் தனி இனத்துவம் ஞாபகத்தில் முக்கிய இடம் வகிப்பது பலரும் ஏற்றுக்கொண்ட உண்மையாகும். ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்வதற்குப் பழக்கப்பட்ட சுண்டெலிகளுக்கு புரதத்தொகுப்பைத் தடைசெய்யக்கூடிய நுண்ணுயிர் கொல்லிகள் கொடுக்கப்பட்டபோது பழக்கமான அந்தச் செயலைச் செய்ய அவை மறந்துவிட்டன என்ற பரிசோதனை அவதானம் இந்தமுடிவை மேலும் உறுதிப்படுத்துகிறது.

ஞாபகம் என்பது இரசாயனமுறையில் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறதாயின் அது எவ்வாறு நினைவுக்கு மீட்கப்படுகிறது என்பதே எம்முன் இப்போது உள்ள பிரச்னையாகும். இக் கேள்வியின் பதில் இன்னும் எமக்கு இருட்டாகவே தோன்றினும் மூளையில் தன்னிச்சையாக நிகழுகின்ற சிறிய மின்தொழிற்பாடுகளே நினைவுகள் மீட்கப்படுவதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஞாபக சக்தியை அதிகரிப்பதற்கு என்ன செய்யலாம்? நினைவாற்றலை விருத்திசெய்யும் மாத்திரைகளைக் கண்டு பிடிப்பதற்காகப் பல ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன. ஒரு காலத்தில் அவ்வாறான மாத்திரைகள் விஞ்ஞானிகளால் மனிதனுக்கு வழங்கப்படும் என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு. ஆனால் அவற்றின் பின்விளைவுகள் எவ்வாறு இருக்குமோ?

## வயதுபோகும்போது

வயதுபோகும்போது நினைவாற்றல் மிகக்குறைந்துபோகிறது என்பது மனித வர்க்கத்தின் ஒரு பெரியகுறையாகும். கிட்டத்தட்ட 35-40 வயதின் பின், ஒரு நாளில் இறந்து அழிந்துபோகும் ஒரு இலட்சம் மூளையின் நரம்புக்கலங்கள் மீட்கப்படுவதில்லை என்ற உண்மை இந்த இழப்பிற்கு முக்கிய காரணமாய் இருக்கலாம். அத்துடன் மூளைக்குக் குருதி கொண்டுசெல்லும் நாடிகள் நாளடைவில் தடிப்பதனால் மூளைக் கலங்களுக்கான உணவு வழங்கல் பாதிக்கப்படுவதும் ஒரு காரணமாய் இருக்கலாம், வயதுபோனவர்கள் பெரும்பாலும் அண்மையில் நடைபெற்ற நிகழ்வுகளை மறந்துவிட்டாலும் பழைய கால நினைவுகள் தெளிவாக இருப்பதாகப் பெருமை அடித்துக்கொள்வார்கள். பழைய நினைவுகள் பலமுறை மீட்கப்பட்டவை என்பதனால் தெளிவாக இருக்கக்கூடும். போதிய ஒட்சிசன் கலங்களுக்குக்கிடைக்காமல் போவதே குறுகிய கால நினைவுகள் வயது போகப் போக விரைவில் அழிந்துபோகக் காரணமாகும் என்று உளவியல் அறிஞர்கள் நம்புகிறார்கள், வயதுசென்ற பிறகு இதயமும் வலுவுடன் துடிப்பதில்லைத்தானே!

ஆகவே ஞாபகத் திறனை விருத்திசெய்ய விரும்புகிற நாங்கள் அதற்கான மாத்திரைகள் கண்டுபிடிக்கப்படும்வரை நிறைய வாசிக்கலாம், அவதானிக்கலாம். படிக்கலாம். உடலைப்போலவே மூளையும் பயிற்சிக்கு அடிமையாகிறது. உள்ளத்தை எப்போதும் துடிதுடிப்புடனும், சுறுசுறுப்புடனும் வைத்திருக்கும் திறமை உள்ளவர்களுக்கு ஞாபக மறதி குறைவாகும்.

(இக்கட்டுரைக்குத் தேவையான சில கருத்துக்கள் றீடர்ஸ் டைஜஸ்டில் இருந்து பெறப்பட்டன)

# புரட்சிக் கவிஞன் . . .

[6 ம் பக்கத் தொடர்ச்சி]

சத்தியத்தின் காவலர்கள் எமக்குவேண்டாம், சசிவாதம் சாத்திரங்கள் வேதம் மூடம், சொத்துமுறை தனியுடைமை கண்டுப்பேசி சுத்தமெனும் சைவாதம் போலிவேஷம், நத்தரையில் உழைப்பவர்க்கே உரிமைவேண்டும், இதைத் தடுக்க மெய்ம்மதல்கள் எதிராய் வந்தால் பத்துமுறை பத்தென்ன நூறாய் நூறாய் பலதடவை என் கவிதை நெருப்பைக்கக்கும். திருமலையில் நடந்த எழுத்தாளர் கவிஞர் மகாநாட்டுக் கவியரங்கில் பாடிய 'பூவுலகிற்கேற்ற இனி புதிய ஜனநாயகமே' என்ற பாடல் உணர்ச்சிக் குமுறல்.

புத்தூரைப் பிறப்பிடமாகக்கொண்ட புதுவை இரத்தினதுரை திருமலையில் ரஞ்சினியைக் காதல் மணம் புரிந்தார், மெலிந்த உடல் கவர்ச்சியான முகம். கவிஞனுக்கே சிறப்பான காந்தக் கண்கள். சிங்கப்பூரில் பிடித்த அழகான கலர்ப்படம் கிடைத்தது. கவிஞர் செழித்திருக்கிறார். கவிதையின்றி நாங்கள் வாடியிருக்கிறோம்.

காதல் மணம் புரிந்த திருமலையில் நடந்த ஒரு கவியரங்கில் ஒரு தோழனின் காதற் கடிதம் என்ற தலைப்பில் அவர் பாடிய நீண்ட கவிதை அப்படியே குமரனில் வெளிவந்தது? அம்மாதம் குமரனுக்கு நல்ல கிராக்கி. இரத்தினதுரைக்கு பாராட்டுக்களைத் தேடிக்குவித்த கவிதை நூலாகவும் வெளிவந்தது. நித்தியானந்தன் அருமையான முன்னுரை எழுதியிருந்தார். தும்மற் படைப்புகளால் தூசு தட்ட முடியுமென நம்பும் இலக்கியத்தில் நானில்லை ஆதலினால் பேனா பிடித்தெழுதுவேன். புரட்சிக்கு வேளைவரின் -என்று நீழும் அக்கவிதை அச்சா...

பாட்டாளிக் கவிஞன் இரத்தினதுரையும் ஒரு பாட்டாளி. அதனால் அந்த வர்க்க விடிவுக்காக அவர் பாடும் பாடல்கள் போலித்தன்மையில்லாமல் ஒலிக்கிறது. ஈழத்தின் பிரசித்திபெற்ற ஆலயங்களிலுள்ள சித்திரத்தேர்களில் இந்தக் 'கம்யூனிஸ்ட்' கவிஞரின் கைவண்ணமும் கலந்திருக்கிறது. அவற்றைக் காணும்போது அந்த நர்சனத்தில் என் மனதில் தனியான பக்தி பூக்கும்.

பரதபாக்கியான் என்ற புனைபெயரில் குமரன் இதழில் தொடர்ந்து கவிதை எழுதிய இரத்தினதுரை, அதன் ஆசிரியரான நாவலாசிரியர் கணேசலிங்கனை அடிக்கடி நன்றியுடன் விமர்சிப்பார் - கவிஞன் நான்-கவித்துவ உள்ளம் எனது என்று இயற்கையை ரசிக்கவும், இன்பத்தைப் பாடவும் அவரது மனம் முந்தவில்லை. உழைக்கும் வர்க்கம் படும் துயர்தான் அவரைக் குமுற வைத்தது. நட்புக்கு இனிய தென்றலான உள்ளம்கொண்ட கவிஞர் பாட்டொன்று தொடங்கிவிட்டால் குமுறுவதைப் பார்க்கவேண்டுமே! எரிமலையாகிவிடுவார். பொங்கலைப்பற்றி எத்தனை பாடிவிட்டார்கள். அவரும் பாடுகிறார் பாருங்கள்., கூடியவிரைவில் இந்தக்குமுறிடும் இதயம் நீதி தேடும்போது எங்கள் தேசமும் பொங்கும்... பொங்கும்...

பேராதனை வளாகத் தமிழ்ச் சங்க பொன் விழாப் போட்டியில் தங்கப்பதக்கம் பரிசு பெற்ற 'உழைப்பாளிகளிடமிருந்து படைப்பாளிகளுக்கு' கவிதையிலே அவரது சீற்றம் 'உலையேற்ற அரிசிக்கும் புளிக்கும் நித்தம் உழைத்துவரும் எங்களது பெண்கள் தன்னில் மூலையழகா பார்த்ததிலே கவிதை செய்தீர் மூடர்களே உம் கவியை நெருப்பிற் போடும்'!

துணுக்குத் தூசுகள் தட்டுப்பட தமிழனை தன் புதல்வனின் வரவை எதிர்பார்க்கிறான் -நானும்தான்.

## சரித்திர......

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பறைசாற்றுங் கருவிகளாக சரித்திரநாவல்கள் படைக்கப்படுவது மிக, மிக அவசியமானதொரு காரியமாகும்.

ஈழத்திலே எவ்வளவோ சிறந்த நாவலாசிரியர்கள், சிறுகதையாசிரியர்கள் பலர் இருக்கிறார்கள். எனினும், சரித்திரத்தில் கை வைப்பதற்குத்தயங்குகிறார்கள். கே. வி. எஸ். வாஸ், வ.அ இராசரத்தினம், செங்கை ஆழியான், அருள் செல்வநாயகம் ஆகியோர் ஓரிருமுறை சரித்திர நாவலை எழுதியிருக்கிறார்கள். அதுவும் மிகச் சிறியளவிலே. இன்று வரை இலங்கையின் பண்டைய தமிழ், சிங்கள அரசர்களின் வரலாறு, மக்களின் கலைகலாச்சாரப் பாரம்பரியங்களைப்பின்னணியாகக் கொண்ட பெரியளவிலான சரித்திரநாவல் ஒன்று படைக்கப்படவேயில்லை. வளர்ந்துவரும் இளம் எழுத்தாளர்களாவது, தமக்குக் கிடைக்கின்ற ஆதாரங்களையும், சான்றுகளையும் வைத்துக்கொண்டு ஈழத்தில் சரித்திர நாவல்கள் படைக்க முன்வருவார்களானால் அது போற்றத்தக்க விடயமாகும்.

வெறுமனே சரித்திரத்தைப் பள்ளியில் படித்துவிட்டால் பயனில்லை. படித்தவை சரியானதா என்பதைப் பகுத்தறிவின் துணைகொண்டறிய முற்படவேண்டும். அறிந்தபின் அதைக் கருவாக வைத்துக்கொண்டு உண்மையான சரித்திர நாவல்கள் படைக்கப்படவேண்டும். என்றோ நடந்தவைகளை இன்றும் நாமறியஏதுவாயிருப்பவை, அன்றன்றுஉள்ள அறிஞர்கள் எழுதி வைத்த சரித்திரச் சான்றுகளே! ஆகவே, இன்றைய காலகட்டத்திலுள்ள நாம், இருக்குங் காலத்தில், எம்முன்னோர்களைப்பற்றிய, அரசர்களைப் பற்றிய வரலாறுகளை, சரித்திர நாவல்களாகப்படைத்தால், அடுத்துவரும் மானுட சந்ததிக்கு அவை சரித்திரத்தைப் புகட்டும். வெறும் பாடப்புத்தகமாக இல்லாது கதை வடிவிலே சரித்திரங்கள் அமைகின்றபோது அதைப் படிப்பவர்கள் தொகை கூடுகின்றது; அறிவுவளர்கின்றது. பண்டைய வரலாறு புத்துயிர் பெற்றுக் கொள்கின்றது. ஆகவே, சரித்திர நாவல்கள், கதைகள் எழுதுவதில் 'சரித்திரம் படைப்போர்'' ஆக நாம் மாறுவோமாக!

டாலர் கவிதை:

## பட்டம்!

வானில் ஓடும் நிலவைப் போலே
ஜாலங் காட்டிப் பறக்குது பார்!
வாலை ஆட்டும் நாயைப் போலே
வாலை யாட்டிப் பறக்குது பார்!

அம்மா கூந்தல் அழகினைப் போல்
அசைந்து அசைந்து பறக்குது பார்!
அண்ணா விட்ட சதுரப் பட்டம்
அழகாய் ஏறிப் பறக்குது பார்!

'கண்ணும் பூச்சி' ஆட்டங் காட்டி
காற்றில் ஏறிப் பறக்குது பார்!
'விண்விண்' என்றே அது கூவி
விரைவாய் ஏறிப் பறக்குது பார்!

-- கண. மகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் கல்லூரியில் 'ஜூலியஸ் சீசர்'

இலங்கையில் ஆங்கில மொழிமூலம் பாடபோதனைகள் நடைபெற்ற காலத்தில் கல்லூரி மாணவ, மாணவிகள் ஆங்கிலத்தில் பேசுவதும் எழுதுவதும், தொடர்புகொள்ளுவதும் கட்டாயச் செயலாகக் கருதப்பட்டுவந்தது. தமிழிலோ, சிங்களத்திலோ பேசினுல் தண்டம் அறவிடப்படுவதும் அக்கால ஆங்கிலப் பாடசாலைகளில் நிலவிய ஒரு பழக்கமாகும். ஆனுல் இன்றோ தாய்மொழிக்கு முதலிடம் கொடுத்து பாடபோதனைகள் நடைபெறுவது மாணவர்களின் சிந்தனை வளர்ச்சிக்கும் ஆற்றலை விருத்திசெய்வதற்கும் உதவும் என்ற கல்விமான்களின் கருத்துக்கு அமையவே கல்வி ஊட்டப்படுகின்றது.

இந்த நிலையில் ஆங்கில மொழி அறிவு எம்மாணவர்களுக்கு எவ்வளவுக்கு இருக்கும் என்பது நாம் சொல்லாமலே புரிந்துகொள்ளலாம், இருந்தும் ஆங்கில அறிவை வளர்ப்பதற்காக அரசாங்கமும் ஆசிரியர்களும் [illegible] முயற்சிசெய்யாமலில்லை. ஆங்கில அறிவை [illegible] விருத்திசெய்வதற்கு கல்லூரிகள் இன்று மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் பாடத்துணை நடவடிக்கைகள் பெரும் பங்கை வகிக்கின்றன. இவற்றுள் ஆங்கில நாடகங்கள், அபிநயம், [illegible] ஒப்புவிப்பு, பேச்சு, [illegible] டுரைப்போட்டி முக்கியமானவை. சில பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பரிசளிப்பு விழாக்களில் மாத்திரம் ஆங்கில நாடகங்களை மேடையேற்றித் திருப்திப்படுத்துவதும், பெற்றோரைத் திருப்திப்படுத்துவதும் உண்டு. நாடகம் ஒரு பாடமாகக் கற்பித்தல் இன்று பெரும்பாலான உலக நாடுகளிலுள்ள கல்லூரிகளிலும் சர்வகலாசாலைகளிலும் கல்விப் போதனையில் முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டது. நமது நாட்டில் நாடகத்தைஓர் பாடமாகக் கற்பித்தும், நாடகமூலம் ஏனைய பாடங்களைக் கற்பித்தலும் ஆரம்ப நிலையிலிருந்தாலும் நாடக மேடையேற்றல் தொண்டுதொட்டு நடந்துவருவது கண்கூடு. நாடகம் ஒன்று மேடையேறுவதற்குமுன் நாட

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

கப் பயிற்சி, களப்பயிற்சி முக்கியமென்பது இன்றைய நாடகவியலார் அனுபவமாகும். இத்துறையில் இராமநாதன் கல்லூரி மாணவிகள் எந்நிலையில் உள்ளனர் என்பதை அவர்கள் அண்மையில் கல்வி அமைச்சர் திரு. நிசங்க விஜயரத்தின முன்னிலையில் பரிசளிப்பு விழாவில் மேடையேற்றிய ஆங்கில நாடகமான 'ஜூலியஸ்சீசர் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

பல வருடங்களுக்குப்பின் தரமான ஆங்கில நாடகமொன்றை மாணவிகள் நடித்துக் காட்டியமை போற்றக்கூடியதாக இருந்தது.

ஆங்கிலத்தின் தரம் குன்றிவரும் இந்நாளில் முழுக்க முழுக்கத் தமிழிலே போதனை பெறும் மாணவிகள் மனத்தைரியத்துடனும் துணிவுடனும் ஜெகசிற்பியனின் உயிர் பெற்ற உரையாடல்களை கனகச்சிதமாகப் பேசி நடித்து சபையோரின்பாராட்டுக்களைப் பெற்றூர்களென்பது குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலும் ஜூலியசீசர் நாடகம் ஆண்கள் நடிப்பதற்கே உரியது என்ற பொதுவான கோட்பாட்டை பிழையென நிரூபித்துக் காட்டிவிட்டனர் இராமநாதன் கல்லூரி உயர்வகுப்பு மாணவிகள். ஜூலியஸ்சீசராக நடித்த செல்வி கௌரி சச்சிதானந்தனின் குரல் பெண்தான் என்பதை எடுத்துக் காட்டினுலும் நடிப்பும். வேடப்பொருத்தமும் மிகப் பிரமாதம். நாடகத்தை நெறிப்படுத்தி தயாரித்த ஆசிரியர், பாத்திரங்களுக்கேற்ற பொருத்தமான மாணவிகளைத் தேடிப்பிடித்ததைப் பாராட்டாமல் இருக்க முடியாது. புறூட்டஸாக நடித்த செல்வி கமலாதேவி காசிப்பிள்ளை தனது அழகான கச்சிதமான ஆங்கில உச்சரிப்பின்மூலமும் நடிப்பின்மூலமும் ரசிகர்களது நெஞ்சில் நிறைந்து நிற்கிறூர்; எல்லாவற்றிற்கும் மேலாக அந்தோனியாக நடித்த செல்வி சாந்தி பூரண சுப்பிரமணியம் [illegible] ஜூலியஸ்சீசரது [illegible] சதிகாரர்களையும் [illegible] முகபாவம் மூலம் மன [illegible] களை வெளிப்படுத்தி [illegible] பொழுது ரசிகர்கள் [illegible]

மறந்து ரசித்துக்கொண்டனர் சபையில் நிசப்தம் நிலவியது. இவரது உரையாடல், தோற்றம், வேடப்பொருத்தம், நடிப்பு ஆகியவை பிரமாதம். கல்கா வாக பாகம் ஏற்ற செல்வி தமிழரசி பொன்னையா யூலியஸ்சீசரைக் குத்திக்கொலை செய்யும்போது நடித்தாரே அந்த நடிப்பு அபாரம். அவரது நடை, உடை, பாவனை மிக அருமையாக அமைந்தன. இதேபோன்றுதான் சின்னவாக நடித்த செல்வி யொமளா சண்முகநாதன், நிமித்தஞக நடித்த செல்வி ஜெயசோதி திருச்செல்வம், காசியஸ் ஆக நடித்த செல்வி ஜெயந்தி கந்தப்பிள்ளை, ஆர். டி. மிடோறஸ்ஸாக நடித்த செல்வி வசந்தி மகேந்திரன் ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

காட்சிகள் விறுவிறுப்பாக அமைந்து அலுப்புத்தட்டாமல் இருந்தது இந்நாடகத்தின் முக்கிய அம்சமாகும். கல்பேணியாவின் கனவுக்குப்பின் இடம் பெறும் ஜூலியஸ்சீசரின் தனிமையும், இடி, மின்னல் காட்சி ஒலி- ஒளி அமைப்பு மிசப் பிரமாதமாக இருந்தது. நாடகத்தில் குறைகள் இல்லாமல் இல்லை. ஆனுல் இவை மிகச் சிலவே. வேடப்பொருத்தம் முழுக்க முழுக்க எல்லாப் பாத்திரங்களுக்கும் இயல்பாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நாடகத்தைத் தயாரித்து, நெறிப்படுத்தி அளித்தவர் இக்கல்லூரி ஆசிரியர் திரு. ஆ.கல்யாணசுந்தரேசன். இவர் நாடக உலகில் பல காலமாக ஈடுபாடுகொண்ட எழுத்தாளர், சிறந்த நடிகர். இந்நாடகத்தில் கையாளப்பட்ட சில நுணுக்கங்கள் அவரது திறமைக்கு சான்று அமைந்திருந்தது.

செல்வி கலைமதி,
(பழைய மாணவி)
இராமநாதன் கல்லூரி,
சுன்னுகம்.

---

### ஆண்என்றுரைக்க ஆருளார்?

ஆணே அழகென்னும்
அறிவுள்ள உம்பேச்சை
அடித்தெறிந்து பேசி
விவாதத்தில் வந்து
யான்
வீண் வம்பில்
மாளாமல்
ஆமோதிக்கிறேன்
அன்பா
உம் கருத்ததனை!

●

மானைப்பாரும்
ஆணே தான்!
மயிலைப்பாரும்
ஆணே தான்-
ஆனுலும்
அவ்வின ஆணுக்குப்
பெண்ணழகு!
பெண்ணுக்கு
ஆணழகு!
அதற்காய் பருவமதில்.

### ஆணு பெண்ணு ?

மனிதரில் மட்டும்
மாதரை அழகென்றுல்
மடத்தனமன்று அது-
ஏனெனில்
மங்கையரிற் புலமை
படைத்த
ஔவை ஒருத்தி
தான்.
சிறுவயதில்
கிழவயதை
எய்திவிட்ட மாதுக்கு
எங்கே தெரியும்
எங்களது அழகு?

●

பருவ வயதில்
பெண்ணென்று
புலவராயிருந்தால்
தெரியும்
அழகு பற்றி
பாடியிருப்பார்
ஆணை இழுத்து
பல பாக்கள்.
பூவுலகில் ஔவை தவிர
புலவரெல்லாம்
ஆணே தான்.
பெண்ணை அழகென்று
கூறுவர் அவர்கள் தான்!

●

ஆணை அழகென்றுரைக்க
அற்புதமாய்
இனியொருவர்
அரங்கேற்றம்
அடையவேண்டும்.
அறிவுள்ளார்
உம்போன்றோர்
ஏற்பார் என்
கருத்தை
என்றுலும்
எனக்கோர் ஆசை
எடுத்துரைப்பீர்
இப்போ
உம் நிலையை.

எஸ் சிவராஜா
(ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

---

# உங்களுக்குத் தெரியுமா?

சூரியனுக்கும், பூமிக்கும் இடைத்தூரம் என்ன?

சராசரி 9.3 கோடி மைல்கள்.

பூமியின் வாயுமண்டலத்திற்கு மேலுள்ள மண்டலம் எது?

மின்னணுமண்டலம்.

சூரிய களங்கம் என்பது என்ன?

சூரியனில் காணப்படும் சில கரும்புள்ளிகள்.

கிரகங்களின் இயக்கத்தைப் பற்றிய விதிகளை வகுத்தவர்?

ஜெர்மன் வானவியல் அறிஞரான கெப்லர்.

மிகக்கூடிய ஒளிபடைத்த நட்சத்திரம் எது?

சிரியஸ்.

கிரகங்களில் மிகச் சிறியது எது?

புதன்,

சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை என்ன?

6000 பாகை C.

கிரகத்திற்கும் நட்சத்திரத்துக்கும் வேறுபாடு என்ன?

கிரகங்கள் சுயாதீனமாக ஒளியற்றவை. ஆனுல் நட்சத்திரங்கள் இயல்பில் ஒளிபடைத்தவை.

சந்திரனில் ஔவை இருக்கிறூர் என்று கூறுவது எதனை?

காக்கில்னியஸ் என்ற பள்ளத்தையும் மலைத் தொடர்களையுமே ஆகும்.

தொகுத்தவர்!
சிவ. மகிந்தன்,
யாழ். இந்துக்கல்லூரி.

---

### பயத்தம் தோசை

தேவையான பொருட்கள்:-

பயத்தம் பருப்பு 1 கப்
அரிசி 1/4 கப்
தருவிய தேங்காய் 1/2 மூடி அளவு
பச்சை மிளகாய் ஆறு
இஞ்சி ஒரு துண்டு
கறிவேப்பிலை சில இதழ்கள்
உப்பு தேவையான அளவு
எண்ணெய் தேவையான அளவு

செய்யும் முறை:-

முதலில் பயத்தம் பருப்பையும், அரிசியையும் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் ஊறவைக்கவும். பிறகு நன்ருக நீரில் களைந்துவிட்டுக் கல்லுரலில் தேங்காய்த் துருவல், பச்சைமிளகாய், இஞ்சித்துண்டு, உப்பு ஆகியவற்றைச் சேர்த்து நன்கு அரைக்கவும். பிறகு கறிவேப்பிலையைச் சேர்த்து அடுப்பில் தோசைக் கல் போட்டு, மாவு சிறிது ஊறிய பிறகு தேவையான அளவில் தோசையாக ஊற்றி இரண்டு புறமும் வேகவைத்து எடுக்கவும். இதுதான் பயத்தம் பருப்புத் தோசை. சட்னி அல்லது மிளகாய்ப் பொடியைச் சேர்த்துச் சாப்பிடலாம். சாதாரண தோசைபோல இந்தப் பயத்தம்பருப்புத் தோசையும் அழகாகச் சுட வரும்.

கே. பிரேம்லதா
(இராமநாதன்)
கல்லூரி, சுன்னுகம்)

---

# கொரில்லா அரக்கன்

## அத்தியாயம்-19

கிளி குமரமுனிவர் கூறிய படி இன்று சமுத்திரத்திற்கு மேலாகப் பறந்து சென்று குறிப்பிட்ட ஓரிடத்தில் மூழ்கியது.

நீருக்கு அடியிலிருந்த திமிங்கிலத்தின் உருவமுடைய ஒரு குகையினுள் நுழைந்த கிளி அங்கிருந்த மாளிகையில் நுழைந்து அங்கிருந்த மன்னர் தேவகுமாரனைச் சந்தித்தது.

அவரிடம் விபரம் எல்லாவற்றையும் கூறிய கிளி 'அதிசய மைப்புட்டியைக் கொடுத்துதவ வேண்டும்?' என்று கேட்டது.

கிளியின் வேண்டுகோளுக்கு இணங்க அரசரும் 'சரி' என கிளியையும் அழைத்துக் கொண்டு அந்த நகரின் முனையில் அமைந்திருந்த அவர்களின் குலதெய்வத்தின் கோவிலை அடைந்தான்.

அவர்களின் குலதெய்வத்தின் சிலை பயங்கர உருவமைப்புடையதாக இருந்தது! அரசரும் தமது குலதெய்வத்தை மண்டியிட்டு வணங்கிய பின்னர் அச்சிலையைத் தூக்கினுர். அங்கே...சிலையிருந்த இடத்தில் ஒரு சிறிய அறையிருந்தது! அதனுள் இருந்த ஒரு சிறிய புட்டியை எடுத்து கிளியிடம் கொடுத்தார்.

கிளியும் அரசருக்கு நன்றி கூறிவிட்டு இந்துசமுத்திரக் கரையை அடைந்தது. அப்போது மீண்டும் இராச்சதக் கழுகு அங்கு வரவே கிளி அதன் மேல் ஏறி அமர்ந்து கொண்டதும் அது மின்னலென வேலனின் இருப்பிடத்தை நோக்கிப் பறக்கலாயிற்று.

வழியில் கிளி 'கழுகு நண்பரே! முனிவர் கூற்றுப்படி மூன்று நாட்கள் முடிவடைய இன்னும் சில மணி நேரமே யுள்ளது. அதற்குள் நாம் வேலனை அடையாவிடின் அவனைக் காப்பாற்ற முடி

(9-ம் பக்கம் பார்க்க)

வி. சந்திரகுமார்

---

# 'தாமரை' ஒரு நோக்கு...

கனகராயன்குளம் மகா வித்தியாலய மாணவர் தமிழ் மன்ற வெளியீடான தாமரையின் சர்வதேசச் சிறுவர் ஆண்டுச் சிறப்பு மலர் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இலங்கையில் இருந்து இதுவரை காலமும் 110 பக்கங்களுடன், அழகான அட்டையோடு ஒவ்வொரு கதைக்கும் கட்டுரைக்கும் படங்கள்போட்டு ஒரு சஞ்சிகை வெளிவந்தது எனக்குத் தெரியவில்லை.

வவனியாவிலேஒருசிறியபின் தங்கிய கிராமத்தில் இருக்கின்ற பாடசாலையில் இருந்து இத்தகைய பொலிவோடும், கருத்துச் செறிவோடும் ஒரு சஞ்சிகை வெளிவருகின்றது என்றுல் அது நிர்வாக ஆசிரியர் திரு. எஸ். சி.எஸ். சிதம்பரநாதனது அயரா முயற்சியினுல் கிடைத்த மகத்தான சாதனை என்றே சொல்லவேண்டும். கதைகளுள் 'அவன் ஒரு மெழுகுவர்த்தியாகிருன்' என்ற கதையை எழுதிய என். எம். நாகேஸ்வரனைப்போற்றவேண்டும். கதையை வாசிக்கும் போது கண்கள்பனிக்கின்றன. 'ஓரம் போ' என்று செல்வி வ. இராசலட்சுமி எழுதிய கதைஒருபுதியபாணி. சிறுவன் மாணிக்கம் மறக்கமுடியாத ஒரு கதாபாத்திரம். 'பாவம் அவன் படிக்கவில்லை,' 'அர்த்தமுள்ள தர்மம்,' 'அவனும் மனிதன்தான்' ஆகியன சுமாரான கதைகள், கட்டுரைகள் நல்லகருத்துள்ள பொருள்களில் எழுதப்பட்டிருக்கின்றன. கலாநிதி அ. சண்முகதாஸ், சு. ஜெயகாந்தன், அம்பி, செல்வி வசந்தா சரவணமுத்து, ஐயா. சச்சிதானந்தன், செ. வேலாயுதபிள்ளை, குப்பிளான் ஐ. சண்முகன் போன்ற முதிர்ந்த தெளிந்த எழுத்தாளர்களின் விடயதானங்கள் மெச்சத்தக்கனவே. இச்சஞ்சிகையிலே உள்ள மற்றொரு சிறப்பு அம்சம் அறிவுத்துணுக்குக்கள். கஞ்சிக்குப் பருப்புத் தூவியது போல் ஆங்காங்கே மிக அருமையான துணுக்குக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அடுத்து அரசியல் தலைவர்கள் என்ற தொடர் கட்டுரையில் அடுத்து தந்தை செல்வாவிற்கு இடங்கொடுத்தல் சாலச் சிறந்ததாகும். புதிர் எண் அறிவுப்போட்டி ரொம்ப ஜோர்! இத்தகைய சஞ்சிகை அகில இலங்கைக்கும் பரவலாக்கப்பட்டு, எல்லாப்பாடசாலைகளும் விடயதானம் செய்யும் நிலை உருவாகாதா? மொத்தத்தில் தாமரை ஒரு நிறைகுடம். ஈழத்து-இந்திய சஞ்சிகைகளுக்கு ஒரு முன்னேடி.

செல்வி ஜெகா சுப்பையா
(இராமநாதன் கல்லூரி)
சுன்னுகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ராஜன்-புஷ்பலதா நடித்த
புகுந்த வீடு (புத்தம்புதிய பிரதி)

லிடோ (யாழ்.நகர்) தினசரி: 10-30, 4-45, 7-00, & 9-30
போன்: 7693
Zoltan Hound of Dracula

2nd Crowded Week
Shanthi JAFFNA Phone: 7642
Daily 5 Shows - 10-30, 2-30, 4 45, 7-00 & 9-30 p.m.
We are going to kill one passenger a minute until New York City pays us 1 million Dollars"
ROBERT SHAW... HECTOR ELIZONDA
"The Taking of Pelham One Two Three" Scope Color
Every one read it, Now you can Live it.
Action Packed! Suspense!! Thriller!!!

வெற்றிகரமான 4-வது ஜனத்திரள் வாரம்
ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி அலைமோதும் மங்கையர் கூட்டம்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
நடித்த சிறந்த காதல் காவியம்
தேவதாஸ்
முன்னர் பார்த்து மீண்டும் பார்க்கத் துடிப்போரும் தவறவிட்டு ஏங்குவோரும் அடுத்துவந்த இளம் சந்ததியாரும் கண்டு களிக்க கிடைத்த கடைசி சந்தர்ப்பம் இதுவே.
காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பமாவதால் ரிக்கட்டுகளுக்கு முந்துங்கள்.

SRIDHAR JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 1-30, 4-15, 7-00 and 9-45 p.m.
Burt Lancaster - Dean Martin in
AIR PORT
The Great Novel.........Now A Motion Picture
Coming Soon : FRAMED
BADGE 373

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
ஜெய்சங்கர் - ஜெய்சித்ரா
நாகேஷ், K. A. தங்கவேலு, S. A அசோகன்
பணக்காரப் பெண்
(புத்தம் புதிய கொப்பி)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா, தேங்காய் சீனிவாசன்
நடிக்கும்
6-வது ஜனத்திரள் வாரம்
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்

மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
Daily 10-30, 4-45, 7-00 & 9-30
BOMB at 10 - 10

REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
Graham Dorsey became a legend after his death.
The trouble was he was still alive..
THE MOST WANTED MEN IN THE WEST!
Charles Bronson and Jill Ireland
"FROM NOON TILL THREE"
The west will never be the Same again...but neither will BRONSON. More Suited for adults.


# லண்டன் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய இரு விழாக்கள்

(லண்டன்)

மத்திய லண்டனில் உள்ள வை. எம். சி. ஏ. மகாத்மா காந்தி மண்டபத்தில் கடந்த மாதம் 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணி தொடக்கம் லண்டன் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் திரு. கே. ரங்கநாதனின் தலைமையில் தைப்பொங்கல் விழாவினைக் கொண்டாடினர். அதே சமையம் நாவலர் பெருமானின் நூற்றாண்டு நினைவுமுகமாக இரு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. திரு. எம். சிவாவின் 'தமிழ்த் தாய்' வணக்கத்துடன் விழா ஆரம்பமானது.

தமிழர் திருநாள்- தைப் பொங்கல் பற்றி ஊற்றன் ஆசிரியை திருபதி மனோ ஆனந்தநாதன் சிறப்புச்சொற்பொழிவு ஆற்றினார். அதன்பின் திரு. மு. சிவசுப்பிரமணியம் நாவலர் மறைந்த நூற்றாண்டு நினைவாக 'நாவலரும் திருவள்ளுவரும்' என்னும் பொருள் பற்றிப் பேருரை நிகழ்த்தினார். அவர் வள்ளுவர் கருத்துக்களை நாவலர் பெருமான் எப்படி அழகாகக் கையாளுகிறார் என்பதை நன்கு விளக்கினார். மேலும் கசடறக் கற்றபின் இதன்படி ஒழுகிக் காட்டியவர் நாவலர் பெருமான் என்று குறிப்பிட்டார். இதன் பின் தேவா சிவபாதசுந்தரம் (11), கிருஷ்ணா சிவபாதசுந்தரம் (9) ஆகிய இரு சிறுவரின் நாவலர் பெரியாரைப் பற்றிய ஓர் உரையாடல் இடம்பெற்றது.

அன்றைய முக்கிய பரத நாட்டியக் கலைநிகழ்ச்சியை மலேஷியாவில் பரதம் பயின்ற திருமதி ஆதீஸ்வரி வடிவேல் வழங்கினார்.

பொங்கல், வடை, சுண்டல்' காப்பி வழங்கப்பட்டது. சங்கச் செயலாளர் திருமதி தங்கரத்தினம் முத்துக்குமாரசுவாமி நன்றி கூறினார்.

# அடையாள அட்டை

மட்டுவில் பொ. கமலேஸ்வரன் என்பவரின் அடையாள அட்டையொன்று கரம்பன் தெற்கைச் சேர்ந்த வ. பசுபதி என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளவும்.

......

# கற்கோவளத்தில் 50 வீடுகள்

(புலோலி)

பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள கற்கோவளக்கிராமத்தில் சுயஉதவி வீடமைப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்படவுள்ள 50 வீடுகளுக்கான அடிக்கல்லை, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும், யாழ். மாவட்ட வீடமைப்புத்திணைக்கள உதவி ஆணையாளரும் யாழ். வீடமைப்பு அதிகார சபை முகாமையாளருமான திரு. கே. இராமநாதன் ஆகியோர் அடிக்கல்லை நாட்டி திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். (கு)

......

# நாய்களின் தொல்லை நீங்கும்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பட்டின சபை பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்ததையிட்டு நூற்றுக்கணக்கான நாய்கள் பிடித்துக் கொல்லப்பட்டன. பண்டத்தரிப்புச் சுகாதார பரிசோதகர் திரு. எஸ். மாணிக்கவாசகர் கொழும்பிலிருந்து விசேடமாக தருவிக்கப்பட்ட விஷவாய்வு வான் மூலம் இந்த கட்டாக்காலி நாய்களை பிடிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார். (கு)

......

# வைக்கோல் கொள்வனவு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலைகளுக்குரிய வைக்கோல் கொள்வனவு நிலையங்களில் வைக்கோல் கொள்வனவு செய்வதற்கான வேலைகள் மீண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நெல் அறுவடை காலம் ஆரம்பமாகி விட்டதால் விவசாயிகளிடமிருந்து வைக்கோல் கொள்வனவு செய்யப்படுகின்றது. அரசடிச்சேனை, கொடுவாமடு, ஒலுவில், சம்மாந்துறை, தும்பன்கேணி, ஆகிய இடங்களில் இப்பொழுது வைக்கோல் கொள்வனவு செய்யப்படுகின்றது.

# பேராதனை பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டது!

## தண்ணீர் பற்றுக்குறை காரணமாம்

(பேராதனை)

கடந்த சில தினங்களாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நிலவிவரும் தண்ணீர்ப் பற்றுக்குறையினால் விரிவுரைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனைத்தொடர்ந்து இங்கு கல்விபயிலும் பலமாணவர்கள் வளாகத்தைவிட்டு நீங்கித் தமது வீடுகளுக்குச்சென்றுள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழக நீர்விநியோகக்குழாயில் உடைப்பு ஏற்பட்டுப் பழுதடைந்ததே இத்தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டது. (உடு.நி-ர்)

# சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் மீனு பேசினாள். தன் தகப்பனைப் பார்த்து.

'ஐயா! எங்கள் எசமான் சொல்லுகிறபடி கேளுங்கள். தோட்டத்தை விட்டு எழும்பினால் எமக்குக் கதியேது?' இதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. பேராசிரியரின் அல்செஷன் நாய் இராமன் வந்தது. இராமனுக்கு சாப்பாடு போடுவதும் மீனுதான். குளிக்க வார்ப்பதும். உலாத்துக்கு கொண்டுபோவதும் மீனுதான். அலுவலை விளங்கியதுபோல இராமன்வந்து மீனுவைப் பார்த்து வாலையாட்டியது! அவளை நக்கியது. பல முறை வந்துபோகின்ற பழனியை இராமனுக்குத் தெரியும். பழனியைப் பார்த்து இராமன் அன்புடன் உறுமியது.

'பழனி! இரவிற்கு இங்கு நில், திரும்பிப்போக இருபது ரூபா. இது இனாம் இல்லை, சம்பள முற்காசு. பின்னர் கழிக்கலாம்' என்றார் பேராம்பலம். அடக்கமாகப் பழனி கையை நீட்டினான், பழனியின் சமுதாயம் விழிப்புணர்ச்சி பெறச் சேவல் கூவாதோ?

(யாவும் கற்பனை)

# கொரில்லா...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

யாது!' என்று கவலையுடன் கூறியது.

இதைக் கேட்ட கழுகும் 'கவலையை விடும் நண்பரே இதோ ஒரு நொடியில் நான் அவ்விடம் செல்கிறேன்!' எனக்கூறி தனது உருவைப் பன்மடங்கு பெருப்பித்து மின்னலென வானில் வேகமாகப் பறந்து நொடிப்பொழுதில் வேலனின் இருப்பிடத்தை அடைந்தது.

மகிழ்ச்சியுடன் காலில் பற்றியிருந்த அதிசயப் புட்டியைத் திறந்து அதிலிருந்த தைலத்தை வேலன் மீது கொட்டியது. கற்சிலையாக நின்ற வேலன் மீது அதிசயத் தைலம் பட்டதும் அவன் மீண்டும் உயிர் பெற்று தனது பழைய நிலையை அடைந்தான்!

மீண்டும் வேலன் கற்சிலை நீங்கி உயிர் பெற்றதைக்கண்டு கிளி சந்தோஷமடைந்தது. எனினும் கோபத்துடன் 'வேலா பார்த்தாயா? நான் கூறியும் கேட்காமல் அவசர புத்தியினால் வினையைத் தேடினாய் இனிக் கவனமாகச் செயல்படு!' என்று முழுக் கதையையும் கூறியது கிளி.

வேலனும் தனது செயலுக்காக மனம் வருந்தி பேராபத்திலிருந்து தம்மைக் காப்பாற்றிய கழுகையும்; கிளியையும் கட்டியணைத்து முத்தமீட்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். பின்பு கழுகும் கிளியும் வேலனிடம் விடைபெற்றுக் கொண்டு தத்தம் இடத்தை நோக்கிச் சென்றன.

வேலன் அங்கிருந்த தேவதாருமரிடம் சென்று 'சிங்கராஜாக்காட்டுத் தேவதையே! எனது அறியாமையாலும், அவசர புத்தியாலும் கொரில்லா அரக்கனின் செயலென நினைந்து தங்களுக்குப் பெருந் தீங்கு விளைவிக்க எண்ணினேன் நாங்கள் என்னை மன்னித்தருளவேண்டும்' என அம்மரத்தை மண்டியிட்டு வணங்கினான்.

'கவலைப்படாதே வேலா! உன்னை நான் அப்போது தடுத்து நிறுத்தியதன் காரணம் இதோ இந்தப் பெட்டியை உன்னிடம் கொடுப்பதற்காகவே. இப்பெட்டியில் பச்சை, சிவப்பு, நீலநிறப் புட்டிகளில் மூன்று வகைத் தைலங்கள் உண்டு. அவற்றில் பச்சைப்புட்டியிலுள்ள தைலத்தை நீ பூசிக்கொண்டால் நீ பிறர் கண்களில் படாமல் இருக்கலாம்! நீலப்புட்டியில் இருக்கும் தைலத்தைப் பூசிக்கொண்டால் நீ மீண்டும் உனது சுய உருவத்தை அடையலாம்! இறுதியாக சிவப்புப் புட்டியிலுள்ள தைலத்தை இறந்தவர்கள் மீது கொட்டினால் அவர்கள் உயிர் பெற்று எழுவர்!' எனக் கூறி மூன்று வகைப் புட்டிகளையும் வேலனிடம் கொடுத்தது காட்டுத் தேவதை தேவதாருமர்!

'வேலா நீ துணிந்து சிந்தித்துச் செயல்படவேண்டும். வெற்றி உனக்கே. இத்தைலங்கள் உனக்குத் தக்க சமயத்தில் உதவும்! சென்று வா' என ஆசீர்வதித்து அனுப்பியது காட்டுத்தேவதை. (வளரும்)


ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆ.
விஜயகுமாரி
கருணாநிதியின்
அவன் பித்தனா?

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-மாலினி
பொன்சேகா
பைலட் பிரேம்நாத்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர்-அஞ்சலிதேவி
[illegible]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

டெஸ்ட் கிரிக்கட்:

## பாகிஸ்தானின் துணிகரச் செயல்

(கல்கத்தா)

இந்திய-பாகிஸ்தான் 6-வது இறுதி கிரிக்கட் டெஸ்டின் 4-வது நாளான நேற்று பாகிஸ்தான் கோஷ்டி எதிர்பாராத வகையில் இந்தியக் கோஷ்டியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களை விட 57 ஓட்டங்கள் குறைவாகப் பெற்றநிலையில் ஆட்டத்தை நிறுத்தி இந்தியக் கோஷ்டியை 2-வது இன்னிங்ஸ் ஆட அனுமதித்தது. அப்போது பாக்.கோஷ்டி 4 விக்கட் இழப்புக்கு 274 ஓட்டங்களைப்பெற்றிருந்தது.

அடுத்து 2-வது இன்னிங்ஸை ஆடிய இந்தியா ஆட்டநேர இறுதியில் 9 விக்கட் இழப்புக்கு 186 ஓட்டங்களைப்பெற்றிருந்தது.

பாக். காப்டன் சுஹிவ் இக்பாலின் துணிச்சல் மிக்க நடவடிக்கை காரணமாக இந்த டெஸ்டில் பாகிஸ்தான்கோஷ்டிக்கு வெற்றிகிட்டலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்கோர் விபரம். இந்தியா 331, 9-186. பாகிஸ்தான் 4-274.

இந்திய வீரர் கபில் தேவ் இந்த டெஸ்டின் 2-வது இன்னிங்ஸில் 13 ஓட்டங்களைப் பெற்றதுடன் 100 விக்கட்டுகளையும் 1000 ஓட்டங்களையும் பெற்ற உலக இளம் வீரராகத் திகழ்கிறார். (இ)

## யாழ்.மாவட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்துடன் தொடர்புகொள்ளும்படி சங்கம் ஆசிரியர்களைக் கோரியுள்ளது.

6 வருடங்கள் வெளி மாவட்டங்களில் சேவை முடித்தவர்கள் மே மாதம் முதலாம் திகதி முதல் யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்படுவர் என மேற்படி சங்கத்தின் துணைப் பொதுச்செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம் தெரிவித்தார். (இ)

## கண்டனப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கைச் செலவு உயர்வினை எதிர்த்து வடபிராந்திய தமிழ்த் தொழிற்சங்கங்களும் ஏனைய தொழிற்சங்கங்களும் இணைந்து நடாத்தும் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை யாழ். மாநகர சபை மண்டபத்தில் தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியின் செயலாளர்நாயகம் திரு. ஐ. தி. சம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், திருவாளர்கள் வாசுதேவா நாணயக்காரா, பாலா தம்பு, மாநாம குணசேகரா, யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பலரும் உரையாற்றுவர். (கொ)

## உபசார விழா

இலங்கைத் தொழிற்கல்வி தேசிய விஞ்ஞான மாணவர் மன்றங்களின் வருடாந்த தேநீர் உபசார விழா இன்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் பல்தொழில் நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இத்தேநீர் விருந்து வைபவத்தில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. பிரதம வுருந்தினராகவும், யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (கொ)

## இளைஞர்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தார அபிவிருத்தியின்மையிலிருந்தும் விடுதலை பெற்றிடச் சமதர்மப்பாதையில் புதியசமுதாயத்தை உருவாக்கிட முதலில் சிந்தனைப் புரட்சி, அடுத்துச் சமுதாயப் புரட்சி. அதுவே தமிழினத்தின் விடுதலைப் புரட்சிக்கு அழைத்துச் செல்லும் என்றும் உறுதி பூணுங்கள்,

அத்துடன் குறிப்பாக 'பெப்ரவரி 4-ம் நாள'ன்று அரசு எடுக்கின்ற சுதந்திரதின விழா நிகழ்ச்சிகள், அணி வகுப்புக்கள் எதிலுமே தமிழ்மக்கள் எவருமே பங்குபற்றக் கூடாது என்று வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.


நிறைய தொகைமட்டுமே கையிருப்பிலுண்டு
சொகுஸான பயணத்திற்கு

**FALCON SCOOTERS**

- பல நிறங்களில்
- விரும்பிய மாதிரி தேர்ந்தெடுக்கலாம்.

**பல்க்கன் ஸ்கூட்டர்கள்**

**பல்க்கன் ஏஜென்சி,**
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 685


## அகில இலங்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அவர் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழினத்தின் சுதந்திர தாகத்தை உலகறியட்டும். ஆனால் சம்பிரதாயத் தமிழ்த் தலைவர்கள் ஆட்சியாளர்களுக்குப் பகிரங்கமாகச் சூட்டும் புகழ்மாலைகளையும் வைக்கின்ற விருந்துகளையும் அறியும்போது உலகம் என்ன நினைக்கும்? சம்பிரதாயத் தமிழ்த் தலைவர்கள் மனச்சாட்சிக்குப் பயந்து பிரதமரைப் பாராட்டியதையும், ஜனநாயகவாதி என்று புகழாரம் சூட்டியதையும், திரு. சிறில் மத்தியூக்கு மறைமுகமாகப் பாராட்டுரை தந்ததையும் பிரதமரின் புன்னகையில் மயங்கி ஒபெக் மனுவில் கையெழுத்திட்டதாகப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டதையும், அன்று சிங்கள ஸ்ரீ இலக்கமிடப்பட்ட பஸ்களைப் பகிஷ்கரித்தவர்கள் இன்று புதிய சிங்கள ஸ்ரீ பஸ்களுக்கு வாழை கட்டி வரவேற்றதையும் உலகறியும். விலைவாசி உயர்வுக்கு அரசு பொறுப்பல்லவென்று பகிரங்கமாக அமைச்சர் முன்னிலையில் கூறியதையும் உலகம் அறியும் போது என்ன நினைக்கும் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்நிலையில் உலகறியச் செய்ய சுதந்திரதினக்கொண்டாட்டங்களை பகிஷ்கரியுங்கள் என்று கூட்டணித்தலைவர்கள்கூறுவது தமது மக்களை ஏமாற்றுவதற்குக் காட்டும் வேடிக்கை என்றல்லவா உலகம் கருதப்போகின்றது. சுதந்திர தினத்தன்று கறுப்புக்கொடிகளைப் பறக்க வீட்டு துக்கதினமாகக்கொண்டாடிய சமஷ்டிக் கட்சியினர் 1956-ல் யு. என். பி. ஆட்சியுடன் ஒத்துழைப்புப் பல்லவி பாடியபோது சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டதையும் உலகமறியும். சிங்கக்கொடி ஏற்றி மகிழ்ந்ததையும் உலகமறியும். இன்று ஒருபடி இறங்கி பறக்கவிட்ட கறுப்புக்கொடிகளை மறந்து கொண்டாட்டங்களைப் பகிஷ்கரியுங்கள் என்று மட்டும் சொல்வதோடு நிறுத்திக் கொள்வதையும் உலகறியும்.

உண்மையாக எமதுநிலையை உலகறியச்செய்ய வேண்டுமெனில் தமிழினம் பெரும்பான்மையாகவும் ஏகோபித்தும் தெரிவுசெய்து அனுப்பிய தலைவர்கள் பாராளுமன்றத்தை அன்று பகிஷ்கரித்து உலகறியச்செய்திருக்கலாம். அதைவிடுத்து இன்றுவரை அரசுடன் ஒத்துழைத்து அளப்பரிய சலுகைகளைப் பெற்றுக்கொண்டு இன்று பெற்றோர்களையும்மாணவர்களையும்பகிஷ்கரிக்க மீண்டும் அழைப்பது விந்தையாக இருக்கின்றது.

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

(புலோலி)

பருத்தித்துறை அம்பன் கமநலச்சேவை நிலையத்தில் வெளிக்கள உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. வீ. இராசையா பெரும்பாக உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்று சாம்பல்தீவு கமநலச் சேவை நிலையத்திற்கு இடமாற்றம்பெற்றுள்ளார்.


உ
சிவமயம்

### திருமணத் திருமுகம்

நிகழும் சித்தார்த்தி வருடம் தைத்திங்கள் 21-ம் நாள் (4-2-1980) திங்கட்கிழமை இரவு 10-30 மணிதொடக்கம் 11-30 மணிவரையுமுள்ள சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில்,

| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| --- | --- |
| **மயில்வாகனம்** | **பத்மினி** |
| (சேகர் & சகோதரர்கள்) அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருமணம், யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மணவாளக் கோலம்; பிற்பகல் 1 மணி தொடக்கம் 2-30 மணிவரை மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்

| | |
| --- | --- |
| வீ. வேலுப்பிள்ளையும் பாரியாரும் | ச. பவானந்தமும் பாரியாரும் |
| (மணமகன் பெற்றோர்) | (மணமகள் பெற்றோர்) |
| புளியங்கூடல், ஊர்காவற்றுறை. | ஸ்ரீ மாஸ்டர் சகோதரர் 181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |

தனிப்பட்ட அழைப்பிதழ்கள் கிடைக்காதவர்கள் தயவுசெய்து இதையே அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளவும்.

4867



பெற்றோல் விலை கூடிவிட்டதா? கவலைவேண்டாம்...இதோ வந்துவிட்டது...

**SUZUKI**

- குறைந்த எரிபொருட் செலவில் கூடிய தூரம் சொகுசான பயணத்தை 'சுஸுக்கி' உங்களுக்கு வழங்குகின்றது
- உங்கள் தேர்வுகளை எமது காட்சிச்சாலையில் பார்வையிடுங்கள்
- SUZUKI -- A 50 - 9100/-
  A 80 - 9750/-
  K 125 - 13800/-
  GP 125 - 14800/-
  Lambrette 150 DL - 11900/-
- உங்கள் தேவையை உறுதிப்படுத்த விரையுங்கள்




**சி. சின்னத்துரை அன் கொம்பனி** **S. Sinnathurai & Co.**

25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7357


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் பெப்ரவரி மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No. GE/8948/78. The Eelanaadu P. B. No. 49. Telegram: Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org